பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

When, only The best is Good Enough




Buy Solide Pumps

# உதயன்

விலை ரூ 2.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்

பம்பையே வாங்குங்கள்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு புரட்டாதி மீ 24 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 28 (10 – 10 – 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 205

# கிட்டு உட்பட 157 விடுதலைப் புலிகள்

# யாழ்., திருமலைக்கு அனுப்பப்பட்டனர்

## காலையில் விடுவிக்கப்பட்டவர்களை ஏழு விமானங்கள் ஏற்றி வந்தன

சென்னை, அக்டோபர் 10

இந்திய தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் சிறை வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) உட்பட 157 தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று ஏழு விமானங்களில் யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட பிரமுகர்களில் ஒரு பிரிவினர் மதுரையில் இருந்து மூன்றுவிமானங்களிலும் ஏனையோர் சென்னையில் இருந்து நான்கு விமானங்களிலும் ஏற்றப்பட்டு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்கள் செப்டம்பர் 17 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர்.

இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து இன்று 10 ஆம் திகதி முதல் கிட்டு சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பிக்க இருந்தார்.

இது தொடர்பாக கடந்த 3 ஆம் திகதி அவர் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்திக்குக் கடிதம் எழுதி இருந்தார். (இ-எ)

## ஜே. வி. பி. இன்று ஹர்த்தால்

கொழும்பு, அக் 10

இன்று திங்கட்கிழமை நாடு தழுவிய ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ஜே.வி.பி.இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இதனால் இன்று நாடு பெருமளவில் ஸ்தம்பிதம் அடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் இதனை முறியடிப்பதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. (இ-க)

## உண்ணாவிரதம் இருக்கும் கைதிகள்

## நீராகாரத்தையும் இன்றுமுதல் நிறுத்துவர்

மட்டக்களப்பு, அக். 10

சாகும்வரை உண்ணாவிரதம் இருந்துவரும் ...ஸா தண்டிக்கப்பட்ட அரசியல் கைதிகள் முகா...மைச் சேர்ந்த அரசியல் கைதிகள் ஐவரும் இன்று 10ஆம் திகதி முதல் நீராகாரத்தையும் நிறுத்திவிட்டு திட்டமிட்டபடி சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை தொடரப் போவதாக அறிவித்துள்ளனர்.

எஸ். சிவலிங்கம், ஏ. ஜெயானந்தம் பி பாலராஜன், பி கிருஷ்ணமூர்த்தி, எம் முருகானந்தன் ஆகியோரே இந்த ஐவரும் ஆவர்.

சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு கோரி இன்று 10ஆம் திகதி வரையிலான கால அவகாசம் விதித்து நீராகாரம் மட்டும் அருந்தும் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கடந்த 30ஆம் திகதியிலிருந்து இவர்கள் மேற்கொண்டு

(8ம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி பகுதிகளில் ஹர்த்தால்—துக்கதினம்

### பிரசைகள் குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 10

அக்டோபர் 10ஆம் திகதியை நினைவுகூருமுகமாக இன்று தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் ஹர்த்தாலும், துக்கதினமும் அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரசைகள் குழு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

மேற்படி பிரசைகள் குழு, தென்மராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக்குழு, அன்னையர் முன்னணி ஆகியவை ஒழுங்கு செய்திருந்த விசேட கூட்டம் நேற்று நடைபெற்றது.

அனைத்து வெகுஜன அமைப்புக்களும் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

★ அவசரகால விதிகள் நடைமுறையில் இருக்கும்போது, இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாணசபை இணைப்பை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

★ வடக்கு – கிழக்கு புனர்வாழ்வு வேலைகளுக்கு ஜனநாயக ரீதியான, ஓர் அமைப்புத் தேவையென்ற கருத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

★ வடக்கு – கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட விதம் குறித்து சகல ஜனநாயக நாடுகளுக்கும் பகிரங்கப்படுத்த வேண்டும் என்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### தென்மராட்சி மாணவர் ஒருங்கிணைப்பு குழுவும் அழைப்பு

யாழ்ப்பாணம், அக் 10

அக்டோபர் நடவடிக்கைகளின் ஓராண்டு நினைவு தினமான இன்று தென்மராட்சி பச்சிலைப் பள்ளிப் பகுதிகளில் ஹர்த்தாலும் துக்கதினமும் அனுஷ்டியுங்கள்.

இவ்வாறு தென்மராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது

இன்றைய தினம் மக்களின் சகல நடவடிக்கைகளும் ஸ்தம்பித நிலையை அடைய வேண்டும் என்றும் மேற்படி குழு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-க)

## இன்று துக்கதினம் அனுஷ்டிக்குமாறு மாணவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக் 10

இன்று பூரண துக்க தினம் அனுஷ்டிக்குமாறு யாழ்ப்பாண மாணவர் ஒருங்கிணைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக மேற்படி குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அக்டோபரின் கறைபடிந்த நாட்களை நினைவுகூரும்முகமாக இன்று அனைத்து வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்தியும் —

உள்ளூர் தூரசேவை பஸ் சேவைகளையும் அனைத்து கேளிக்கை விழாக்களையும் நிறுத்தியும்—

ஓராண்டு நிறைவை பூரண துக்க தினமாக அனுஷ்டிப்போம்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வழமைபோல் இயங்குமாறு பணிப்பு

கொழும்பு அக் 10

அரச நிறுவனங்கள் யாவும் இன்று வழமைபோல இயங்கவேண்டும்

கொழும்பு ஹர்த்தாலை முன்னிட்டு அரச நிறுவனங்களின் தலைவர்கள் இவ்வாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (இ-ச)

### படகு சேவை தடைப்பட்டது

யாழ்ப்பாணம், அக 10

நெடுந்தீவுக்கான படகுப் போக்குவரத்துச் சேவைகள் கடந்த இரண்டு நாட்களாகத் தடைப்பட்டுள்ளன. (க)

## ஜே வி.பி. சுவரொட்டி

யாழ்ப்பாணம் அக்.10

வடக்கு — கிழக்கு இணைப்புக்கு ஜே.வி பி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது இது தொடர்பாக அம்பாறையில்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இந்த இணைப்பு மூலம் சிங்கள மக்கள் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்கவுள்ளனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க சகலரும் ஓர் அணி திரள வேண்டும் என்று சுவரொட்டியில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(இ 21)

## நீர்வேலிப்பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள்

யாழ்ப்பாணம் அக் 10

நீர்வேலி கந்தசுவாமி கோயில் பகுதியில் நேற்றுக்காலை 8 மணி அளவில் சுமார் அரை மணித்தியாலமாக பலத்த துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன

இச் சம்பவத்தினால் வீதிகளில் மக்கள் நடமாட்டமோ வாகனப் போக்குவரத்தோ காணப்படவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் வாகனங்கள் யாவும் கோப்பாய் உரும்பராய்வீதியூடாகத் திருப்பிவிடப்பட்டன

வடமராட்சிப் பகுதியில் இருந்து எந்த வாகனங்களும் அச்சுவேலிக்கு அப்பால் பயணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை.

(இ-க-72)

### இங்கும்

யாழ்ப்பாணம் அக் 10

சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளில் நேற்று பதற்றம் நிலவியது.

தூர இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் காலையில் பாதிக்கப்பட்டபோதிலும்— பின்னர் வேறு பாதையால் சேவைகள் நடைபெற்றன. (இ-க)

### சுபநேரம்

10 - 10 - 1988

புரட்டாதி - 24

திங்கட்கிழமை

சுபநேரம்:-

12- 02 முதல் 1-32வரை

ராகுகாலம்:-

7 – 32முதல்9 - 02 வரை

இது இரவுக்கும், பகலுக்கும் பொருந்தும்.

### முச்சந்தி முரளி



உந்த 'சாதனைவீரர்' எண்ணிக்கை இப்பதான் வெளிவருகுது பாருங்கோ.

## மாணவரின் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்கிறது

கொழும்பு, அக். 10

கண்டி, மாத்தறை நகரங்களில் பல்லாயிரக்கான மாணவர்கள் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆர்ப்பாட்டஞ் செய்த மாணவரைக் கலைக்க பாதுகாப்புப் படையினர் குண்டாந்தடிப் பிரயோகஞ் செய்தனர்.

கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்தனர்.

அம்பாறை மாவட்டத்திலும் சிங்களவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்திய அமைதிப் படையை வெளியேற்றுமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது

மாத்தறை கண்டி மாவட்டங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்க

(8ம் பக்கம் பார்க்க)

## இன்று பாடசாலைகளை மூட அரசு உத்தரவு

யாழ்ப்பாணம், அக் 10

இன்று நாட்டின் சகல பாடசாலைகளும் மூடப்பட்டிருக்கும்.

இவ்வாறு நேற்று அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டில் நடைபெறும் ஒழுக்கச்சீர்கேட்டு நடவடிக்கைகளில் மாணவர்கள் சிக்கிக்கொள்ளாமல் இருப்பதற்காகவே இன்று பாடசாலைகள் மூடப்படுகின்றன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஒழுக்கச் சீர்கேட்டை தடுக்க முடியாமல் உள்ள பாடசாலைகளைத் தொடர்ந்து காலவரையறையின்றி மூடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

''ஜனநாயக விரோத சக்திகள் ஒழுக்கச் சீர்

(8ஆம் பக்கம் பார்க்க)

இந்தியாவுடனான

## தற்போதைய ஒப்பந்தத்துக்கு பதிலாக நட்புறவு ஒப்பந்தம்

### பிரதமர் பிரேமதாச நம்பிக்கை

கொழும்பு, அக். 10

தற்போதைய இலங்கை—இந்திய ஒப்பந்தத்துக்குப் பதிலாக நட்புறவு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்த முடியும் என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாச நேற்று நம்பிக்கை தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு சம்பந்தப்பட்டவர்களுடன் பேசித் தீர்வுகாண முடியும் என்றும் பிரதமர் சொன்னார்.

நேற்று கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிறப்பு மாநாடு இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சி

(8ம் பக்கம் பார்க்க)

### 12 ஆயிரம் பேருக்கு இன்று அந்தப் பதக்கம

கொழும்பு, அக் 10

வடமராட்சிப் பதக்கத்தை முப்படைகளையும் பொலீஸ் சேவையையும் சேர்ந்த 12 ஆயிரம் பேருக்கு வழங்க ஜனாதிபதி ஜெயவர்த்தனா அங்கீகாரமளித்திருக்கிறார்.

சம்பிரதாயபூர்வமாக இப்பதக்கம் அளிப்பு வைபவம் ஜனாதிபதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயக அச்சுறுத்தல்களை முறியடிக்க அரசு சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்

கொழும்பு அக் 10

ஜனநாயகத்துக்கான அச்சுறுத்தல்களை முறியடிக்க அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

இவ்வாறு நேற்று வெளியிடப்பட்ட அரச அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு, சட்டம் என்பனவற்றை நிலைநாட்டவும் - அமைதி விரும்பும் மக்களுக்கு துன்பம் துயரம் ஏற்படுத்தும் ஜனநாயக விரோத சக்திகளின் முயற்சிகளை முறியடிக்கவும்—

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-க)

### நவராத்திரி

யாழ்ப்பாணம் அக் 10

நவராத்திரி விழா நாளை செவ்வாய் கிழமை ஆரம்பமாகிறது.

முதல்மூன்று தினங்கள் துர்க்கைக்கும் அடுத்த மூன்று தினங்கள் இலக்குமிக்கும் இறுதி மூன்று தினங்கள் சரஸ்வதிக்கும் என வழிபாடுகள் நடைபெறும்.

பத்தாம் நாள் ''விஜய தசமி'' யுடன் விழா நிறைவுபெறும்

(இ-ச)

### அடையாளம் காணப்பட்டது

யாழ் முத்திரைச்சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்தவர்களில் ஒருவர் தர்மராசா கணேசலிங்கம் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

21 வயதான இவர் பூநகரியில் நல்லூர் என்ற இடத்தைச் சேர்ந்தவர்.

இவரது தந்தையார் வைரவநாதன் தர்மராசா சடலத்தை அடையாளம் காட்டினார்.

(இ-10)

### பல்கலைக்கழக மாணவர் கைது குறித்து அரசு

கொழும்பு அக் 10

பல்கலைக்கழகங்களில் தங்கியிருந்த மாணவர்கள் சிலர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். வெளியாரின் ஊடுருவல் நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்படி அரசாங்கம் அறிவித்து உள்ளது

இவர்கள் விசாரணை ... விடுதலை செய்யப்படுவ... ன்றும் அரசு அறிவி... ளது.

(... க)

### இன்று கடைசி நாள்

வடக்கு -கிழக்கு இணைந்த மாகாணசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசிநாள் இன்றாகும்.

கடந்த 3 ஆம் திகதி முதல் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதுவரை எட்டு மாவட்டங்களிலும் இரு

(8-ம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த Gas Cooker சிலிண்டருடன், கண்ணாடி மேசை, Burma Teak Show Case, Baby-Cot, கதிரைகள், மேசை கட்டில், சாப்பாட்டு மேசை, 4 Burner Electric Cooker, Oven உடன், பெரிய சூட்கேஸ், தேக்கு விருந்தைக் கதிரைகள் மற்றும் பல பாவித்த பொருட்களும் உடன் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென். பற்றிக்ஸ் சந்தியருகில்) (6974)

குளிர்சாதனப்பெட்டி, கண்ணாடி அலுமாரி, கண்ணாடி சோக்கேஸ், மேசை, கதிரைகள், விருக்கிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 195, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (6968)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C 357)

## தேவை

பிடவை வியாபார ஸ்தாபனத்திற்கு 35 வயதிற்கு மேற்பட்ட ஆண் விற்பனையாளர்கள் தேவை. நகரத்திலிருந்து 5 மைல் தூரத்திற்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. [மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் வேலை பழகுபவர்களும் விண்ணப்பிக்கலாம்] தொடர்பு இல 382, C/பா உதயன், யாழ்ப்பாணம். (C 557)

பிளேட்டின் மெஷின் மைண்டர், கொம் சிற்றர் (பழகுபவர் இருபாலாரும் முனிசிபல் எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது) நேரில் வரவும் நாமகள் அச்சகம், 219 கே கே. எஸ் வீதி. மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம். (6976)

### வகுப்புகள்

றேடியோ, ரீ வீ. திற்றூர், ஓகன் வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. படிக்க விரும்புவோர் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். தொடர்பு: ரெவிவொய்ஸ் எஞ்ஜினியேஸ், 184, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [7081]

### A/L இரசாயனம்

108, Brown Road A/L 89 இரசாயனம் மீட்டல் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் 11-10 88 செவ்வாய் 7. 15a.m. [செவ், வியா, 7. 15a m. பௌதிக இரசாயனம்] திங், புத, வெள்ளி, 7. 30 a m. சேதன இரசாயனம். (7082)

### அனுமதிப் பரீட்சை ஆண்டு 6

6 ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சைக்கான [கணிதம், தமிழ்] மாதிரிப் பயிற்சிப் புத்தகம் வெளியாகியுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல புத்தகசாலைகளிலும் புதிய கல்வி நிலையத்திலும் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூபா 14/50. [7077]

### லண்டன் பரீட்சைகள்

17-7-1988 இல் எமது நிலையத்தில் நடைபெற்ற பிற்மன் பரீட்சையின் சுருக்கெழுத்து தட்டெழுத்து மற்றும் பாடங்களின் பெறுபேறுகள் தராதரப் பத்திரங்கள் லண்டனிலிருந்து கிடைத்துள்ளன. 1988 டிசம்பர் பரீட்சையின் விண்ணப்ப முடிவு: 15-10-1988 வெளி மாணவர்களும் தோற்றலாம் S. T. C. A. 149, [37] சிவன்பண்ணைவீதி. [யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திற்கு அண்மையில்] யாழ்ப்பாணம். (7088)

### வீடியோ படப்பிடிப்பு

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள, அமங்கல நிகழ்ச்சிகளை 3 கமெராக்கள் பொருத்தி புதுமையான முறையில் வீடியோ படப்பிடிப்புச் செய்திட "பிரதீப் மூன்ஸ்", புது வீதி, சொய்யாத் தோட்டம். (கிளைகள் இல்லை) தொடர்புகட்கு:- 'துஸ்' (கணில்) (6980)

### தவறிவிட்டது

பூபாலபிள்ளை யோகம்மா என்பவராகிய எனது அடையாள அட்டை, கூப்பன் முத்திரை மற்றும் முக்கியமான பொருள்களுடனான சிறிய பையை கோப்பாய் - யாழ்ப்பாண பஸ்ஸில் தவறவிட்டுள்ளேன். கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7091)

புண்ணியமூர்த்தி விற்வின் இருதயநாயகி ஆகிய எனது அடையாள அட்டை இல: 596463665 V யாழ். வயிரவர் கோயிலுக்கும் ஊர்காவற்றுறை பஸ் தரிக்கும் இடத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது பு. சுலோசனா, நாரந்தனை கிழக்கு. ஊர்காவற்றுறையில் ஒப்படைக்கவும். (7090)

N. Venkatramanan என்றபெயருள்ள மோட்டார் சையிக்கிள் (சாளி Pass - உம் பத்திரங்களும் மாவிட்டபுரத்துக்கும் சந்தரோடைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம், 'ராஜாமெடிக்கல்ஸ்' இல் சேர்க்கவும். (6981)

### UPLANDS FARM கோழிக்குஞ்சு விநியோகம்

ஒவ்வொரு வாரமும் (Lohmann) பிறவுண் பேட்டுக்குஞ்சு சேவல் குஞ்சு கறுப்பு [பிளிமத்] வார்க்குஞ்சு, புறொயிலர் குஞ்சு: குறைந்தவிலைக்கு விநியோகிக்கப்படும். உடனே பதிவுசெய்யவும். இல:9, கந்தையா லேன், சூராவத்தை றோட், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அருகில்.) (7089)

### கோழிக்குஞ்சு விநியோகம்

கோல்டன் கொமற் பிறவுன் பேட்டுக்குஞ்சுகள் சேவற்குஞ்சுகள Hisex பிறவுன் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள, கறுப்பு சேவல் குஞ்சுகள், Hyline பேட்டு குஞ்சுகள். Hyline கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் 14ந் திகதி வெள்ளிக் கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க:- சற்குணராஜ் & பிறதர்ஸ், பிரம்படிஒலன் கொக்குவில். (7082)

## கோழிக்குஞ்சு

### விநியோகம்

பிறிமா இன சிவப்பு, வெள்ளை ஒருநாள் முட்டையிடும் கோழிக்குஞ்சும், புறொயிலர் குஞ்சும், சேவல் குஞ்சும் 8 10-88 முதல் பெற்றுக் கொள்ளலாம். M G G Forage Stores, 208, Ist Cross St, Jaffna. (7074)

# பாண்டிச்சேரி புத்தகக் கண்காட்சியில்
# ஈழத்து நூல்களுக்கு பெரும்வரவேற்பு

பாண்டிச்சேரி, அக் 10

பாண்டிச்சேரி அரசும் பல்கலைக்கழகமும் இணைந்து கடந்த 3 ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை புத்தகக் கண்காட்சி ஒன்றை நடத்தியது.

75 புத்தக வெளியீட்டாளர், விற்பனையாளர் இக்கண்காட்சியில் பங்கு பற்றினர் ஏறத்தாள 50 ஆயிரம் தலைப்புக்களில் நூல்கள் கண்காட்சியில் இடம்பெற்றன முப்பது லட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் விற்கப்பட்டன. 50 ஆயிரம் பேர் கண்காட்சியைப் பார்க்க வந்திருந்தனர்.

முதன் முறையாக இந்த ஆண்டு ஈழத்து நூல்கள் கண்காட்சியில் இடம் பெற்றன. 400 தலைப்புகளில், ஈழத்து எழுத்தாளர் நூல்கள் வைக்கப் பட்டிருந்தன, யாழ்ப்பாணம்—சென்னை ஆகிய இரு இடங்களிலும் வெளியீட்டகம் விற்பனை நிலையம் வைத்திருக்கும் காந்தளகம், ஈழத்து நூல்களைத் தனிக் கண்காட்சியாக அமைத்தது.

ஆங்கில நூல்கள் நிறைய விலைப்பட்டன. 75 காட்சி நிலையங்களுள் 50க்கும் மேல் ஆங்கில நூல்களையே வைத்திருந்தன. பெயர் பெற்ற வெளியீட்டாளர்களான ஒக்ஸ்போர்ட் யூனிவர்சிடி பிரஸ், சாந்த் கம்பெனி, நியூ செஞ்சரி புக்கவுஸ் போன்றவர்களும் பல இறக்குமதியாளர்களும் ஆங்கில நூல்களைக் குவித்திருந்தனர்.

பிரஞ்சு நூல்காட்சி நிலையங்கள் இரண்டு இருந்தன. இவற்றிலும் விற்பனை அதிகம்.

தமிழ் நூல்கள் விற்பனையும் கணிசமாக இருந்தது. அல்லயன்ஸ், வானதி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், கலைஞன், பூங்கொடி, திருமகள், பத்தகப் பூங்கா, ஐந்திணை, காந்தளகம் போன்ற பிரபல வெளியீட்டாளர்கள் உட்பட 20க்கும் மேற்பட்ட காட்சிநிலையங்கள் தமிழ் நூல்களை விற்பனை செய்தன.

பாண்டிச்சேரிக் கல்வி அமைச்சர் திரு. பிரான்சிஸ் கண்காட்சியைத் தொடக்கி வைத்தார்.

மத்திய அமைச்சர் திரு சிதம்பரம் செப்டெம்பர் 10 ஆம் நாள் விழாவில் கலந்து கொண்டு உரை ஆற்றினர்.

ஈழத்து நூல்களுள், அதிகமாக விற்பனையான நூல், முன்னாள் அமைச்சர் திருச்செல்வம் எழுதிய "ஈழத்தமிழர் இறைமை". மத்திய அமைச்சர் சிதம்பரம், பாண்டிச்சேரி அரசு அமைச்சர்கள், பொது மக்கள், நூலகங்கள் யாவும் இந்நூலை விலை கொடுத்து வாங்கினர்.

இக்கால தமிழ் எழுத்தாளர்களுள் செ. கணேசலிங்கம், டொமினிக் ஜீவா, சி. வி. வேலுப்பிள்ளை, கே. எஸ். நடராசா, க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, ஆ கந்தையா, எம் உவைஸ், கவிஞர் சேரன், கவிஞர் சௌரி மாத்தளைசோமு, காவலூர் ஜெகநாதன், செ. யோகநாதன் ஆகியோர் நூல்களைக் கேட்டு வாங்கினர்.

யாழ்ப்பாணம் இரகுநாதய்பர் வாக்கியபஞ்சாங்கம் காலம் கடந்தும் நன்றாக விலைப்பட்டது.

ஆறுமுகநாவலர், வரத பண்டிதர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, விபுலானந்தர், சேர். பொன் அருணாசலம் ஆகியோர் நூல்களும் விலை போயின.

ஏறத்தாழ 150 தலைப்புக்களில் இலங்கைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வெளியிட்ட அறிவியல் மொழி பெயர்ப்பு நூல்கள் இருந்தும் மிகச் சிலரே அவற்றை வாங்கினர்.

கலைச் சொல் அகராதிகட்கு, நூலகர்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது.

நீலகண்டசாஸ்திரி எழுதிய 'தென இந்திய வரலாறு' பாஷ்யம் எழுதிய "வியத்தகு இந்தியா" சாமுவேல்சனின் பொருளாதாரம், ஆகிய நூல்கள் தமிழ் நாட்டிலும் தமிழில் இதுவரை மொழி பெயர்க்கப்படவில்லை. இலங்கையில் பல ஆண்டுகட்கு முன்பே மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டன. இந்தத் தமிழ் மொழி பெயர்ப்புகளை வாங்குவதில் பலர் ஆர்வம் காட்டினர்.

ஆங்கில, தமிழ் அகராதிக்கட்குத் தமிழ் நாட்டில் மிகுந்த வரவேற்பு உண்டு. தரமான அகராதிகள் வெளியிடப்படுவதில்லை என்பதும், ஈழத்தவர்கள்தான் அகராதி எழுதுவதில் வல்லவர்கள் என்பதையும் வலியுறுத்திய பல தமிழ் அறிஞர்கள், ஏன் நீங்கள் அகராதிகளை வெளியிடவில்லை எனக் கேட்டனர்.

அனுமதி பெறாத இடங்களில் நடைபெறும்

## இறைச்சி விற்பனையால் சுகாதாரச் சீர்கேடு

சுன்னாகம் அக். 10

பெருகிவரும் இறைச்சி விற்பனை நிலையங்களால் குடாநாட்டின் பலபகுதிகளிலும் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருகிறது.

சுகாதார பரிசோதகரினால் சோதனைக்குள்ளாக்கப்படாத நிலையில்-பல இடங்களிலும் இறைச்சி விற்கப்படுகிறது. கேட்பதற்கு யாருமில்லை என்ற நிலையில் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் இறைச்சி விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன.

கோமாரி நோயின் தாக்கத்திற்குள்ளான கால்நடைகளின் இறைச்சியும் இந்த நிலையங்கள் மூலம் விற்பனை செய்வதை தடுத்து விட முடியாத நிலை நிலவுகிறது.

அனுமதி பெறப்பட்ட இறைச்சி விற்பனை நிலையங்களிலும் கூட தரமான இறைச்சியை வாங்க முடியாதிருக்கின்றது எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

மேற்பார்வைப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது கடமையை ஒழுங்காகச் செய்ய முடியாதிருப்பதாக கூறுகின்றனர் இதனால் பாவனையாளர்கள் பெரும் பாதிப்படைந்துள்ள கோடு உயிர் ஆபத்தையும் எதிர் நோக்கியுள்ளனர். (உ-27)

### மருந்து வகைகள் விநியோகம்

மானிப்பாய் அக் 10

சங்கானை, அளவெட்டி, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துவகைகளை யாழ்ப்பாணம் சுகாதார திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சிய நிலையம் அனுப்பிவைத்துள்ளது.

இதனால் இந்த வைத்தியசாலைகளில் இதுவரை நிலவி வந்த மருந்துத் தட்டுப்பாடு ஓரளவு நீங்கிவிடும் என எதிர் பார்க்கப்படுகிறது. (உ 90)

கல்வி டிப்ளோமா பயிலும்

## ஆசிரிய மாணவர்களுக்கு படிப்பு லீவு வேண்டும்

அச்சுவேலி அக். 10

திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறி பயிலும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் குறுகியகால படிப்புலீவு, யாழ்-பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதிநேர பயிற்சிநெறியில் பயிலும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது இல்லை.

இந்தப் பாகுபாட்டை நீக்கி, குறுகியகால படிப்புலீவு வழங்குமாறு பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதிநேர ஆசிரிய மாணவர்கள் கேட்டுள்ளனர்.

திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தில் பதிவுசெய்து பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறியை பயிலும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பரீட்சைக் காலத்தில் படிப்பதற்கு வசதியாக நான்கு வாரங்களுக்கு சம்பளத்துடன் கூடிய படிப்புலீவு வழங்கப்படுகிறது.

இந்தவசதி யாழ் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியை பகுதிநேரமாக செய்யும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு கிடைப்பதில்லை.

இதனைச் சுட்டிக்காட்டி, பரீட்சைக் காலத்தில் படிப்பதற்கு வசதியாக படிப்புலீவு வழங்குமாறு பகுதிநேர ஆசிரிய மாணவர்கள் கேட்டுள்ளனர். (உ-11)

### ஆங்கில தினம்

சுன்னாகம், அக். 10

இணுவில் அமெரிக்கன் மிஷன தமிழ் வித்தியாலய மாணவர்களின் ஆங்கில தின வைபவங்கள் இம்மாத இறுதியில் அதிபர் திரு. செ. சோதிப்பெருமான் தலைமையில் நடைபெறும். (உ-27)

## இந்தியத் துருப்புக்களை கோழும்புக்கு அழைத்தது யார்?

அமைச்சர் வெளியிட்ட தகவல்

கொழும்பு. அக். 10

"இந்தியத் துருப்புகளை கொழும்புக்கு அழைத்தது யார்?" - இதுகுறித்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி நாடாளுமன்றத்தில் தகவல் வெளியிட்டார்.

'வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேஷனை' 'மடமராட்சி லிபரேஷன்' என்று நையாண்டி செய்த திரு. ஜெனிவிடி மெல். இந்தியத் துருப்புகளைக் கொழும்புக்கும் அழைத்தார் என்று அமைச்சர் லலித் சொன்னார்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது;

இந்திய அமைதிப் படையை வரும்படி அழைத்தவர் தானே என்று திரு. ஜெனிவிடி மெல் கூறியது தஸ்தாவேஜு ரூபத்தில் உள்ளது.

உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பிரதமர் ராஜீவ் கொழும்பு வந்திருந்தார். அப்போது கொழும்பில் கலவரம் இடம் பெற்றது. அதைப் பார்த்துவிட்டு திரு ஜெனிவிடி மெல் ராஜீவிடம் 'கொஞ்சம் துருப்புக்களை கொழும்புக்கும் அனுப்பி வையுங்கள்'- என்று கூறியிருந்தார்

அதற்கு ராஜீவ் 'எவ்வளவு துருப்புக்கள் அனுப்ப வேண்டும்' என்று ஜெனிவிடி மெல்லைக் கேட்டார். உங்களால் எவ்வளவு அனுப்ப முடியுமோ அவ்வளவு துருப்புக்களை அனுப்பி வையுங்கள்'- என்று ஜெனிவிடி மெல் ராஜீவிடம் சொன்னார்.

அப்படிக் கேட்டதில் பெருமை அடைந்த திரு. ஜெனிவிடி மெல இன்று சுதந்திரக்கட்சியில் இருக்கிறார்.

- இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார். (உ-எ)

### அத்திவாரக்கல் இடப்பட்டது

யாழ்ப்பாணம் அக 10

சாவகச்சேரி நகரக் கொத்தணிப் பாடசாலையான டிறிபேக் கல்லூரியின் விஞ்ஞான கூடத்துக்கு என கல்வி அமைச்சால் ஆறரை லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்நிதி கிடைத்ததை அடுத்து இரு மாடி கொண்ட ஆய்வு கூடத்தை அமைப்பதற்கான அத்திவாரக்கல் அண்மையில் நாட்டப்பட்டது.

கல்லூரி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் அத்திவாரம் இட்டார். அபிவிருத்திச்சபை செயலாளர் சட்டத்தரணி திரு. எஸ். கந்தசாமி, சாவகச்சேரி நகரசபை ஆணையாளர் திரு. த நவரத்தினராசா உட்படப் பல பிரமுகர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். (உ-75)


### கார்சாரதிகளுக்கும் சங்கம்

பருத்தித்துறை வாடகைக் கார் உரிமையாளர்களும் சாரதிகளும் இணைந்து "பருத்தித்துறை கார் உரிமையாளர், சாரதிகள் சங்கம்" என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

இதன் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் பருத்தித்துறை மருதடி குறுமணல் முருகையன் கோவில் முன்றலில் நடைபெற்றது.

அடிக்கடி இராணுவக் கெடுபிடிகளினாலும் எரிபொருள் தட்டுப்பாட்டினாலும் ஏற்படும் பாதிப்பினை உரிய உயர் அதிகாரிகளுக்கு நேரில் எடுத்துக்கூற இச்சங்கம் உதவும் என இச்சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு செ. இராசநாயகம் தெரிவித்தார். (உ- 181)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



● வீரசிங்கம் தவராசா ●


தாயின் மடியில்:- 18- 12- 1967
இறைவன் அடியில்:- 10- 10 - 1987

எமது வானில்
உதய நிலவாக உலா வந்த உன்னை
நீ சுடரு முன்னே
அநியாயர் கூட்டம் உதிரச் செய்து விடினும்
உன் மெய்யழிந்து ஆண்டொன்று போயினும்
அழியாத நினைவுகளை அளித்து
விட்டுச் சென்ற
உன் ஆத்மா சாந்தியடைய
பரமாத்மாவின் பாதம் பணிகின்றோம்.

பிரிவுத் துயரில் மிதக்கும்:
பெற்றோர், உற்றார்.
உறவினர், நண்பர்கள்

தாவடி வடக்கு,
கொக்குவில். (7170)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



### திரு. க. இராமசாமிப்பிள்ளை அவர்கள்

தோற்றம்: 30 - 8 - 1903 மறைவு: 12 - 9 - 1988

மூத்த பெரியவர் முழுமையாய் வாழ்ந்துயிர் நீத்தபோதினில் நீவிர்வந்து ஆறுதல் சேர்த்து எமக்குறுதுயரினைப் போக்கினீர் வார்த்தை இரங்கலாய் வழங்கினீர் மாலைகள் கோர்த்து அஞ்சலி செலுத்தினீர், தந்திகள் நேர்த்தியாகவே நினைந்து அனுப்பினீர் பல்திசையிருந்தும் பாங்குடன் வந்து அன்பு செழுமிய உள்ளத்துடனே தென்புடன் கலந்தவர் ஆத்மா நலமுறப் பிரார்த்தனை செய்துளீர், பணிவுடன்இருகரம் சேர்த்து உளமார் நன்றிகள் செலுத்தினம்


வணக்கம்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 11 - 10 - 1988 காலை கீரிமலையிலும் வீட்டுக் கிருத்தியம் 12 - 10 - 1988 நண்பகல், 20/9, வைரவர் கோயில் லேன், கொட்டடியிலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(7169)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





கடந்த வருடம் அக்டோபரில் பலாலி முகாமில் உயிர் நீத்த 12 போராளிகள் நினைவாக வல்வெட்டித்துறை திருவிலில் நிர்மாணிக்கப்பட்ட நினைவுத்தூபியும் சிறுவர் பூங்காவும் இம்மாதம் ஐந்தாம் திகதி திறந்து வைக்கப்பட்டன.

நினைவுத் தூபியின் முழு உருவத்தையும் அதன் முன்னால் நின்று வடமராட்சி ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த மாணவிகள் தமிழ்த்தாய் வணக்கம் பாடுவதையும் முதலாவது படத்தில் காணலாம்–

இரண்டாவது படத்தில் நினைவுத்தூபியின் நெருங்கிய தோற்றத்தையும்–

மூன்றாவது படத்தில் தாயகத்துக்காக உயிர் நீத்த தியாகிகளின் தாய்மாரும், உறவினர்களுமான பெண்மணிகள் மாலையிடுவதற்கு காத்து நிற்பதையும்–

நான்காவது படத்தில், வல்வெட்டித்துறை பிரசைகள் குழுத் தலைவர் திரு. செல்வேந்திரா உரை நிகழ்த்துவதையும் காணலாம்.

[படங்கள்: வடமராட்சி செய்தியாளர்]

பாஷையூருக்கு

# தனிக் கிராம சேவையாளர் பிரிவு அமைக்கக் கோரிக்கை

## உள்நாட்டு அமைச்சருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம் அக்10

'ஏறக்குறைய ஏழாயிரம் மக்களையும் மூன்று மைல் விஸ்தீரணத்தையும் கலை, கலாசார விளையாட்டு, சமயம் ஆகிய துறைகளில் முதலிடத்தையும் வகிக்கும் பாஷையூருக்கு தனிக்கிராம சேவையாளர் பிரிவு ஒன்றை உருவாக்கித் தரவும்.

பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சன சமூகநிலையம் உள்நாட்டு அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கூறியுள்ளது.

தலைவர் திரு. எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளையால் எழுதப்பட்ட கடிதத்தில் மேலும் குறிப்பிடுவதாவது:

உயர் திரு சி. எக்ஸ் மாட்டின் யாழ்ப்பாண மாநகர சபைவட்டாரங்களைப் புனரமைப்புச் செய்வித்த வேளை பாஷையூர் வட்டாரம் எனப் புறம்பான வட்டாரம் ஒன்று உருவாக்கப்பட்டதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறோம்.

குருநகர், நாவாந்துறை ஆகிய கரையோரப் பகுதிகளுக்கு கிராம சேவையாளர் பிரிவு இருப்பதுபோல பாஷையூருக்கும் ஒரு புதிய கிராம சேவையாளர் பிரிவை அமைத்துத் தருக''.

இப்படி அக்கடிதம் கூறுகிறது.

இதன் பிரதி யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளது. [இ-ச]

# பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுக்கு கைத்தெளி கருவிகள்

மானிப்பாய், அக்.10

ஒவ்வொரு பிரிவிலும் உள்ள பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுக்கு கைத்தெளி கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பயிர்ச்செய்கையாளர்கள் இத்தெளி கருவிகளை குறைந்த வாடகைக்கு பெற்று உபயோகிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது

கடந்த வாரம் யாழ்ப்பாணம் சமநல சேவை திணைக்களத்தில் நடைபெற்ற பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் ஒன்றில் வைத்து யாழ். அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கம் இத்தெளிகருவிகளை பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களிடம் கையளித்தார். [இ 90]

# உப தபால் அதிபர் சூட்டுக்குப்பலி!

மட்டக்களப்பு, அக 10

பள்ளிவாசலில் தொழுகைமுடித்தபின்பு வாசலில் நின்றுகொண்டிருந்த உப தபால் அதிபர் ஜனாப், எம் முபராக் (24) துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

இச்சம்பவம் காங்கேயன்ஓடையில் நடைபெற்றது.

இந்தியப் படையினர் அழைத்த போது பள்ளி வாசலின் உள்ளேசென்ற சமயம் இவர் சுடப்பட்டதாகத் தெரியவருகிறது. (ஓ-21)

# தேர்தல்களை ஒத்திவைக்க ஜே. ஆருக்கு இடமளியாதீர்

## சிங்கள, தமிழ் இளைஞருக்கு சிறிமா வேண்டுகோள்

கொழும்பு, அக் 10

வன் செயல்கள் இடம் பெறுவதைக் காட்டி தேர்தல்களை ஒத்திவைக்க ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு இடமளிக்கக் கூடாது ஆகவே ஆயுதம் தூக்கியுள்ள சிங்கள, தமிழ் இளைஞர்கள் தங்கள் கிளர்ச்சியைக் கைவிட வேண்டும்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா மத்திய மாகாணத்தில் பொதுக் கூட்டங்களில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:–

கிளர்ச்சிகளுக்கு யார் பொறுப்பாக இருந்தாலும் அவர்கள் யு. என். பி. எதிர்ப்புச் சக்திகளுடன் சேர்ந்து தற்போதைய அரசாங்கத்தைத் தோற்கடிக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயுதக் கிளர்ச்சியை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நடத்துவது எமக்குத் தெரியும் நாட்டின் ஏனைய பகுதிகளில் நடத்தப்படும் ஆயுதக் கிளர்ச்சிக்கு யார் பொறுப்பு என்பது எமக்குத் தெரியாது.

இச்செயல்களுக்கு ஜே. வி. பி பொறுப்பு அல்ல என்று பிரதமர் பிரேமதாஸாவே சொல்லிவிட்டார்.

தென் இலங்கையின் ஏழு மாவட்டங்களிலும் மாகாணசபைத் தேர்தல் நடந்த போது நாட்டில் கலவரங்கள் இடம் பெற்றன இருந்தும் அரசு தேர்தலை நடத்தியது.

ஆகவே இப்போது வன் செயல் இடம் பெறுவதாகக் கூறி அரசு தேர்தலை ஒத்திவைக்க முடியாது.

விரக்தியுள்ளவர்கள் விரக்தி நடவடிக்கைகளை எடுக்கக் கூடும். அப்படியானவர்களின் எண்ணங்களுக்கு நாம் இடமளிக்கக் கூடாது.

இந்த அரசாங்கத்தைத் தோற்கடித்த பின்னர் ஆயுதம் தூக்கியுள்ள அனைவரும் சுதந்திரக் கட்சியினருடன் ஒன்றாக அமர்ந்திருந்து பேசி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

தமிழர்களைப் பொறுத்தவரையில தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட அனைவரும் நேராகப் பேச முடியும் என்று நான் நம்புகிறேன். வடக்கு என்றாலும் சரி, தெற்கு என்றாலும் சரி நாம் அனைவரும் இலங்கையரே எமது உள் நாட்டுப்பிரச்சினைகளைத் தீர்க்க வெளிநாட்டுச் சக்திக்கு இடமளிக்கக் கூடாது – இப்படித் திருமதி பண்டாரநாயக்கா சொன்னார். (அ-எ)

# அன்பு என்னும் கயிற்றால் அனைவரையும் பிணைத்து வைத்தார்

## பிரிவுபசார விழாவில் அதிபருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம் அக்10

கல்வி என்னும் பயிருக்கு அன்பு என்னும் நீர்பாய்ச்சி அல்லும் பகலும் அதை வளர்த்தவர் அதிபர் சபாரத்தினம். எங்கள் மத்தியிலிருந்து 35 ஆண்டுகால சேவையின் பின் இளைப்பாறும் திரு. சபாரத்தினம் அன்பென்னும் கயிற்றால் அனைவரையும் பிணைத்து வைத்தார்!

கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிய அதிபர் சபாரத்தினத்துக்கு அவ்வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்களால் அளிக்கப்பட்ட பிரியாவிடை விழாவில் உரையாற்றும் பொழுது மகாவித்தியாலய அதிபர் திருமதி சதாரூபவதி பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

திருமதி பாலசுப்பிரமணியம் மேலும் பேசுகையில், காவலூரில் கல்வி கற்ற சகல மாணவர்களும் இவரால் கல்வி ஊட்டப்பட்டவர்களே.

இவர் இளைப்பாறியதினால் மாணவர்கள் ஓர் அன்புத் தந்தையையும் காவலூர் மக்கள் ஒரு கலங்கரை விளக்கையும் இழந்துள்ளனர் என்றார்.

இவ்வித்தியாலய முன்னைநாள் அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பி பேசுகையில், திரு சபாரத்தினம் மக்களுக்குச் சேவையாற்றவே கடவுளால் படைக்கப்பட்டவர் என்றால் அது மிகையாகாது.

இவ்வித்தியாலயத்திலிருந்து இம்முறைமுதல் முறையாக மூவர் பல்கலைக்கழகத்துக்குத்தெரிவு செய்யப்பட்டது இவருடைய சேவைக்கு ஓர் எடுத்துக்காட்டு எனக் கூறினார்.

விழாவில் இப்பாடசாலையிலிருந்து இளைப்பாறிய திருமதி செல்லம்மா தர்மலிங்கம், இடமாற்றம் பெற்றுச்சென்ற திருமதி ச. பாலசுப்பிரமணியம், திரு. சே. இரத்தினசிங்கம், திரு. கே. தர்மகுணசிங்கம் ஆகியோரின் சேவைகளைப் பாராட்டிப் பலர் உரையாற்றினார்.

# மருதனுமடத்தில் வைத்து மாணவர் ஊர்வலம் இடையில் கலைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், அக்.10

இம்மாதம் 3 ஆம் திகதி அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்ட இணுவில் சைவமகாஜன வித்தியாலய மாணவனை உதயகருணனை விடுதலை செய்யக்கோரிக் கடந்த வியாழக் கிழமை மாலை மருதனுமடத்தில் மாணவர்கள் ஊர்வலம் நடத்தினர்.

பிரஸ்தாப ஊர்வலத்தில் இணுவில் சைவமகாஜன மாணவர்களும், சைவப்பிரகாசவித்தியாலய மாணவர்களும் கலந்துகொண்டனர்.

அவர்கள் மருதனுமடம் அமைதிப்படை முகாம் அதிகாரியிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்க இருந்தனர்.

ஆனால் ஊர்வலம் முகாமை அண்மித்த போது அங்கு வந்த கோஷ்டியும் அமைதிப் படையினரும் ஊர்வலத்தினை ரைத் தாக்கியதோடு கலைத்ததாகவும் சுன்னாகம் மாணவர் ஒருங்கிணைப்புக்குழு வட்டாரங்கள் குற்றஞ்சாட்டின. (அ-5)

# குச்சவெளி பாடசாலை இயங்க முடியாத நிலையில்?

யாழ்ப்பாணம், அக்10

திருகோணமலை மாவட்டத்தில் சலப்பையாறில் நடைபெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்கள் குச்சவெளி மகாவித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதன் காரணமாகக் கடந்த வாரம் முழுவதும் குச்சவெளி மகாவித்தியாலயம் இயங்க முடியாத நிலையில் இருப்பதாக அறியவந்துள்ளது.

இதேவேளை இச் சம்பவம் காரணமாக பல இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

அந்த பகுதியில் ஊரடங்குச் சட்டம் தற்பொழுது அமுலில் இருக்கும் நாட்களில் மீண்டும் அதிகரித்துள்ளதாகவும் தினமும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஓ-10)

# இலங்கைக்கு இந்திய உதவி 2 மடங்கு

புதுடில்லி, அக் 9

இலங்கைக்கு இந்த ஆண்டு 50 கோடி ரூபாவைக் கடனாக வழங்க இந்தியா கொள்கையளவில் ஒப்புக் கொண்டு உள்ளது

கடந்த ஆண்டு 25 கோடி ரூபா கடனாக வழங்கப்பட்டது இந்த ஆண்டு அதனை இரண்டு மடங்காக அதிகரித்து வழங்க இந்திய அரசு சம்மதித்துள்ளது. (ஓ-எ)

# யாழ். மாவட்டத்தில் நிவாரணம் வழங்குவது

## குறித்து நடந்த கலந்துரையாடல்

வேலணை, அக் 10

1983ஆம்ஆண்டுதொடக்கம் இராணுவநடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணப் பணம் வழங்கப்படும்.

இவ்வாறு யாழ் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

புனர்வாழ்வுப் புனரமைப்பு அமைச்சின் ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வுப் புனரமைப்பு நிவாரணத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெயர்ந்த பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குநிவாரணம் வழங்குவதுசம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று கடந்த சனிக்கிழமை எட்டாம் திகதி காலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில யாழ் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்றது

பாதிக்கப் பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணப்பணம்வழங்கப்பட உள்ளதாகவும், இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தை உடனடியாகவழங்கினால் தான் பாதிக்கப் பட்டவர்கள்நிவாரணத்தைப் பெற முடியும்

பாதிக்கப்பட்டவர்கள் தமக்குரிய நிவாரணத்தை விரைவாகப்பெறுவதற்குக் கிராம சேவை அலுவலர்கள் துரிதகதியில இயங்கவேண்டும்— என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த நிவாரணம் சம்பந்தமான எட்டுப்பக்கங்கள் உடைய நிவாரணப் படிவங்களைக் கிராம சேவை அலுவலர்களிடம் பாதிக்கப் பட்டவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

இக்கலந்துரையாடலில்யாழ் செயலக மேலதிக அரசாங்க அதிபர் திரு ப. இராமநாதன், தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு.எஸ். கோபாலரத்தினம், பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு.குலசேகரம் உட்படயாழ்செயலக அதிகாரிகள்பலரும்,யாழ் மாவட்டக் கிராமசேவை அலுவலர்களும், யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர்களும்கலந்து கொண்டனர். [அ-167]

## வட்டக்கச்சிமுதல் கரடிப்போக்குவரை கடும் சோதனை

வட்டக்கச்சியில் இருந்து கரடிப்போக்குச் சந்திவரை வெள்ளியன்று இந்தியப் படையினர் காலை முதல் மாலைவரை வாகனங்களையும் சைக்கிளில் சென்றவர்களையும் கடும் சோதனைக்குட்படுத்தினர்.

அதேவேளை உருத்திரபுரத்திலுள்ள சிவநகர் மற்றும் அதை அண்டிய பகுதிகளிலும் இந்தியப் படையினர் சோதனையும் தேடுதலும் நடத்தினர்.

இப்பகுதியிலிருந்து சிலரை விசாரணைக்காக படையினர் கிளிநொச்சி முகாமுக்குக் கூட்டிச் சென்றனர் எனவும் அறியவருகிறது. (ஒ-ரி)

மாணவர்களிடையே

# ஆராய்ச்சிக்கு உரமிடும் பொறுப்பு விஞ்ஞான ஆசிரியரிடமே

## ஸ்கந்தவரோதய அடிக்கல் நடுமவைபவத்தில் உரை

சுன்னாகம், அக். 10

ஒவ்வொரு மாணவனுக்கும் ஆராய்ந்து பரிசோதித்து அறியும்மனப்பாங்கு இயல்பாகவே உண்டு. இதற்கு உரமிட்டு ஊக்குவித்து விரிவடையச் செய்வதே விஞ்ஞான ஆசிரியரின் பணியாகும்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இருமாடி ஆய்வு கூடத்திற்கு அடிக்கல் நடும் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் திரு. எம். பிரான்சிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

இக் கட்டடத்திற்கு நொருட் நிறுவனம் புனர்வாழ்வு நிதியிலிருந்து 7 லட்சம் ரூபா வழங்கியுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. பொ நாகரத்தினம் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

திரு. பிரான்சிஸ்தனது உரையில் மேலும் கூறியதாவது: மாணவர்கள் விஞ்ஞான ரீதியில் சிந்தித்து ஆராய்ந்து செயலாற்றும் திறனையும் மனப்பக்குவத்தையும் வளர்க்க வேண்டிய பொறுப்பு பாடசாலைகளையே சாரும்.

மாணவர்கள் பாடசாலைகளில் மட்டுமல்ல வீடுகளிலும் பரிசோதனைகள் செய்யத் தூண்டப்படவேண்டும்.

மாணவரை ஆய்வு கூடத்தில் விளையாட அனுமதிக்க வேண்டுமென்ற ஒரு மேதையின் கூற்று எல்லை மீறியதாகிலும் செயன்முறை ஆராய்ச்சியின் முக்கியத்தையே குறிக்கின்றது.

இப்படி அவர் கூறினார்.

யாழ். அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. சு. பரமநாதன் பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. எம். இரத்தினம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

திருமதி பிரான்சிஸ் அத்திவாரக்கல்லை நட்டார். (ச-27)


# தேவை

## விற்பனைப் பிரதிநிதி

(SALES REPRESENTATIVE)

நேர்மையும், அனுபவமும், கடும் முயற்சியும் உடைய விற்பனைப் பிரதிநிதி தேவை. தகுதி உடையவருக்கு தகுந்த சம்பளத்துடன், கொமிஷனும் வழங்கப்படும். இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவோர் திரும்பப் பெறக்கூடிய பிணைப்பணம் செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

கல்வித்தகைமை, நற்சாட்சிப் பத்திரப் பிரதிகளுடன் நற்சாட்சியாளர் இருவரின் பெயர்களையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுதிகதி: 20.10.1988

WHITE FIELD INDUSTRIES
VALLAI ROAD,
CHANKANAI.

(C/399)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் அரசாங்க உதவியுடன் பனம் பழச்சாறு தொழிற்சாலை

## வல்லிபுரக் கோயில் பகுதியில் அமையும்

யாழ்ப்பாணம், அக். 10 வல்லிபுரக் கோயில் பகுதியில் ஜேர்மன் அரசாங்கத்தின் நிதி உதவியோடு பனம் பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப் படவிருக்கிறது.

தெங்குப்பனம்பொருள் அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. க. நடராஜா இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த மூன்று விஞ்ஞானிகளும், ஜேர்மனியின் இலங்கைத் தூதுவரான திரு பிளவ்வும், பிரதேச அபிவிருத்தி அமைச்சுச் செயலாளருடனும் சபைத் தலைவர் திரு. நடராஜாவுடனும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சபையால் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பனம் பானங்களையும் பருகிய ஜேர்மன் தூதுக்குழுவினர், தம்முடன் சில பனம் பழங்களையும்வேறு பனம் உற்பத்திப் பொருள்களையும் விமானம்மூலம்தமது நாட்டின் ஆய்வு கூடத்திற்கு எடுத்துச் சென்றனர்.

உத்தேச திட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கானவர்கள் வேலை வாய்ப்புப் பெறுவர் எனவும், பனங்காய் தேங்காயின் விலையை எட்டிப் பிடித்துவிடுமெனவும் கருதப்படுகின்றது. (உ)

## காய்கறிவகை விலை உயர்வு

கொடிகாமம் அக் 10 கொடிகாமம் மத்திய சந்தையில் காய் கறி வகைகளின் விலை பெருமளவு உயர்ந்திருக்கிறது.

இப்போது நிலவும் கொடூர வெய்யிலும் வரட்சியுமே காய்வகையின் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்றும் அதனாலேயே அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் இப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். (உ-75)

காத்தான்குடி பள்ளிவாசல் சூடு:

## முஸ்லிம் பிரதிநிதிகள் கண்டனம்

மட்டக்களப்பு. அக். 10 சாங்கேயன் ஓடை பள்ளிவாசலில் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் குறித்து காத்தான்குடி சமய, சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் தமது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்புஇந்தியப் படை இணைப்பதிகாரி பிரிகேடியர் ஐ.எம். தாரை சந்தித்து தமது கண்டனத்தை அவர்கள் தெரிவித்தனர்,

இச்சம்பவத்தால் உப தபால் அதிபர் ஜறூப். எம். முபாரக் என்பவர் கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே.

இச்சந்திப்பின்போது முஸ்லிம்கள் தேர்தலில் பங்குபற்ற வேண்டுமென இந்தியப்படை இணைப்பதிகாரி விடுத்த வேண்டுகோளை பிரதிநிதிகள் நிராகரித்தனர்.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தலைப்பற்றி சிந்திக்க முடியாது என அவர்கள் தெரிவித்தனர். [உ 21]

## புத்தகக் கண்காட்சி

இம்மாதம் 15, 16 ஆம் திகதிகளில் வல்வை மகளிர் கல்லூரியில் புத்தகக் கண்காட்சியும் புத்தக விற்பனையும் நடாத்துவதற்கு மாணவர் இளைஞர் பொது மன்றத்தினர் தீர்மானித்துள்ளனர். (உ-70)

## துப்பரவு செய்யப்படாத வாய்க்கால்

கோப்பாய் அக 10 கோப்பாய் வடக்கு பகுதியிலுள்ள வெள்ள வாய்க்கால்கள் மழை காலம் தொடங்கியுள்ள போதும் இதுவரை துப்பரவு செய்யப்படவில்லை

இவ் வாய்க்கால்களினூடாக வெள்ளம் விரைவாக வடியாவிடின்

இராதம்பு கலம்புரை போன்ற குறிச்சிகளில் வெள்ளம் தேங்கி அப்பகுதியில் உள்ள மண் குடிசைகள் சேதமடைய நேரிடும்.

எனவே இதை மிக விரைவில் துப்பரவு செய்யும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர் (உ-72)

# பருத்தித்துறைப் பகுதியில் திருத்தப்படாத வீதிகள்

## அதிகார சபையிடம்முறையீடு

பருத்தித்துறை. அக் 10 பருத்தித்துறையில் உள்ள பருத்தித்துறைக் கரையோர வீதி, பருத்தித்துறை- மருதங்கேணி வீதி ஆகியவை திருத்தப்படாமல் தொடர்ந்து குன்றும், குழியுமாகக் காணப்படுகின்றன

இவ் வீதிகளைத் திருத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு வராத்துப்பளை இளைஞர் நன்னெறிக் கழகம் வீதிகள் அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரிடம் அவசரமாகக் கேட்டுள்ளது.

பருத்தித்துறைக் கரையோர வீதிகளான கடற்கரை, தும்பளை, வராத்துப்பளை ஊடாக ஆனை விழுந்தான் சந்தி வரையான வீதியும், கிராமக் கோட்டுச் சந்தியிலிருந்து பல்லப்பையூடாகமருதங்கேணி செல்லும் வீதியும் வடமராட்சி கிழக்குப் பகுதியின் மிக முக்கியமான வீதிகளாகும். இவ் வீதிகளே நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் கிடக்கின்றன

இளைஞர் நன்னெறிக் கழகம் இக்குறைபாடுகள் பற்றி வீதிகள் அபிவிருத்தி அதிகார சபை யாழ் மாவட்டப் பணிப்பாளர், யாழ் பிரதம பொறியியலாளர், பணி நிறைவேற்றுப் பொறியியலாளர் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளது. (உ-118)

# பாடசாலைகளில் புறமுயற்சி இடம்பெறுவது அவசியம்

## அதிபர்களுக்கு கல்வியதிகாரி ஆலோசனை

சுன்னாகம் அக் 10 பாடசாலையின் அன்றாட நடவடிக்கைகளைக் கவனிப்பதோடு பாடசாலைகளில் முன்போல் புறமுயற்சிகளும் நடைபெறுவதை அதிபர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

—இவ்வாறு கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் மானிப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலை அதிபர்கள் மத்தியில் பேசும் போது குறிப்பிட்டார். சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு. எஸ். தனஞ்செயன் மேலும் கூறியதாவது:-

பாடசாலைகளில் கற்பித்தல் ஒழுங்காக நடைபெற வேண்டும். இதற்கு உதவியாக பாடத்திட்டம், பாடக்குறிப்பு. பாடப் பதிவு என்பன ஒழுங்கான வகையில் கையாளுவதை அதிபர்கள் மேற்பார்வை செய்ய வேண்டும்.

அண்மையில் கல்விப் பணிப்பாளர் பார்வையிட்ட பாடசாலையில் இவற்றில் குறை கண்டுள்ளார் - எவ்வாறான சூழ்நிலை ஏற்படினும் அன்றாடம் செய்ய வேண்டிய பணிகள் பாடசாலைகளில் நடந்தே ஆக வேண்டும், விளையாட்டுப் போட்டி முதலான புறமுயற்சிகளும் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவரின் நலன் கருதி செய்யப்பட வேண்டும்.

-- இவ்வாறு கூறினர். (உ-27)

# முறைசாராக் கல்வியின் அவசியம் உணரப்படுகிறது

## உப - அதிபர் உரை

மானிப்பாய், அக் 10 "பொதுநல அமைப்பு நாடுகளில் பாடசாலைகள் தொழிற்சாலைகளை நடத்துகின்றன. தொழிற்சாலைகள் பாடசாலைகளை நடத்துகின்றன. இதன் மூலம் முறைசாராக்கல்வி அங்கு வளர்ந்து பொருளாதாரப் பிரச்சனைக்கு முற்றுப் புள்ளிவைக்கப்படுகிறது.

எமது நாட்டில் ஏட்டுக் கல்வி தான் இதுவரை பின்பற்றப்பட்டது. முறைசாரா கல்வியின் இயலாமை இன்று உணரப்பட்டுள்ளது முறைசாராக கல்வி அறிமுகப்படுத்தப்படுகிறது. இக்கல்வியின் வெற்றியில் தான் எமது நாட்டுப் பிரச்சினைகள் பல நீங்கும் வாய்ப்பு உண்டு.,

இவ்வாறு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற குழு நிலை விவாதம்ஒன்றில் 'இளைஞர்கள் எதிர் நோககும் பிரச்சினைகள்'' பற்றி உரையாற்றிய பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை உப-அதிபர் திரு. சிவப்பிரகாசம் கூறினர்.

முன்னாள் கல்வி அதிகாரி திரு. சிவஞானசுந்தரம் இவ்விவாதத்திற்கு தலைமை வகித்தார்.

திரு சிவப்பிரகாசம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

பாடசாலையை விட்டு விலகும் மாணவனுக்கு தொழில் நுட்ப அறிவு இல்லாமையால் அவன் சமுதாயத்துக்கு பிரச்சனைக்குரியவனாகிறான். இளைஞர்களின் தேவைகளை, உணர்வுகளை அபிலாசைகளை பெரியவர்களாகிய நாம் மறுத்து வருகிறோம்.

18 வயதில் வாக்குரிமை உள்ள மாணவனை அரசியல் பேசத் தடை விதிக்கிறோம் இது தவறு என்றார்.

உதயன் பத்திரிகையின் ஆசிரியர் திரு. கானமயில்நாதன் 'முரசொலி' பத்திரிகை ஆசிரியர் திரு. திருச்செல்வம் ஆகியோரும் உரையாற்றினர். (உ-90)

## மீனவர்களுக்கு உணவுப் பொருள்

யாழ்ப்பாணம், அக 10 இரவு நேர மீன்பிடித் தடையால் கொழும்புத்துறையைச் சேர்ந்த சுமார் 350 மீனவக் குடும்பங்களுக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கம் அண்மையில் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது

கொழும்புத்துறை கிராமியக் கடற்றொழில் அமைப்பின் நிர்வாகிகளின் முயற்சியால் அவர்களது முன்னிலையில் இப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டன

யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவி திருமதி அந்தோனியார் சுவாமிநாதர், தலைமையில் இவ் உணவுப் பொருள் விநியோகம் நடைபெற்றது. (உ)


மானிப்பாய் கோவில் பற்று
பல. நோ. கூ. சங்கம்


## வெற்றுச்சாக்கு விற்பனை

சங்கத்தில் உள்ள 3500 வெற்றுச்சாக்குகளை விற்பனை செய்வதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 13.10.88 பி.ப. 2.00 மணிவரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப்பத்திரங்கட்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்.

(C-560)


# ஓராண்டு நினைவு அஞ்சலி



திருகோணமலைப் பொறுப்பாளர்

## லெப். கேர்ணல் புலேந்திரன் [குணநாயகம் தர்மராஜா]

தாயக மண்ணில் தோற்றம்: 07 - 06 - 1961

தாயகம் காக்க மறைவு; 05 - 10 - 1987

திருமலையிலவதரித்து நீ புரிந்த விளைவுகளை
பாரறிய வைத்தெம்மைப் பதைபதைக்கச் செய்துவிட்டாய்
ஓராண்டு ஆனலென் ஓராயிரமாண்டும்
நீ வாழ்வாய் நீ வாழ்வாய் நெஞ்சுநிறை மக்களுடன்
தாய் மண்ணின் மீட்புக்காய்த் தன்னுயிரை அர்ப்பணித்த
சேய்களிலே செவ்வேளே செகமெங்கும் சிந்துகின்ற
தீயினிலும் சுடுகின்ற செங்குருதி நீரினையே
நேயத்தால் நெக்குருகி காணிக்கையாக்குகின்றோம்.

உம் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர், நண்பர்கள்.

(C 559) திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் தோட்டப் போட்டி; ஊக்குவிக்க ஏற்பாடு

அராலி, அக். 10

சுமநல சேவைகள் திணைக்களம் நடாத்தவுள்ள வீட்டுத்தோட்டப் போட்டிகளில் அதிகளவு எண்ணிக்கையானோரை பங்கு கொள்ளச் செய்வதற்கான முயற்சிகளில் அராலி தெற்கு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. சி. சிங்கராசா ஈடுபட்டு வருகிறார்.

வீட்டுத் தோட்ட போட்டியில் பங்குபற்ற விரும்பும் விவசாயிகளுக்கு மரக்கறி விதைகள், நாற்றுக்கள் போன்றவற்றை விநியோகிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் விவசாயிகள் உடனடியாக அராலி தெற்கு பயிர்ச் செய்கை அலுவலர் அலுவலகத்தில் பெயர்களை பதிவு செய்து தேவையான விதைகள், நாற்றுகள் மற்றும் உரம் போன்ற உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதுடன் போட்டி தொடர்பான மேலதிக விபரங்கள் ஆலோசனைகளையும் அறிந்து கொள்ளமுடியும்.

சமநல சேவை நிலையங்கள் ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் இப்போட்டிகள் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது.

போட்டியில் வெற்றி பெறுவோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப் படுகின்றது. (உ-12)

## உடைகள் விநியோகம்

யாழ்ப்பாணம் அக் 10

விஷ்வ இந்து பரிஷித், சைவமங்கையர் கழகம் ஆகியவற்றால் கிளிநொச்சி அகதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சுமார் நாலரை இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த உடுபுடவைப் பார்சல்களை பாதிக்கப் பட்ட மக்களுக்கு திருநெறிக்கழகம் அகில இலங்கை காந்திசேவா சங்கம் ஆகியன இணைந்து வழங்கின.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. தேவசிகாமணியின் அனுசரணையுடன் சமூக சேவை திணைக்கள உத்தியோகத்தர் திரு. பொன. நித்தியானந்தன், திருநெறிக் கழக தலைவர் திரு. ப. கணேசபிள்ளை, அகில இலங்கை காந்திசேவா சங்கத் தலைவர் திரு சி. க. வேலாயுதபிள்ளை ஆகியோர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இப்பார்சல்களை வழங்கினர். மேலும் பலருக்கு பார்சல்கள் வழங்கப்படவுள்ளன. (உ)

## மனனப்போட்டி

சுழிபுரம், அக். 10

எதிர் வரும் நவராத்திரி தினத்தையொட்டி வழுக்கம்பரை சன சமூக பஜனைச் சபையினர் சகலகலாவல்லிமாலை மனனப் போட்டியை நடத்தவுள்ளனர். எட்டாம் நாள் நவராத்திரி விழா பூசையின் போது இப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ)

வடக்கு, கிழக்கில் நடக்கும்

# சிங்களக் குடியேற்றங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்

## வாசுதேவ பேட்டி

நவசமசமாஜக்கட்சியின் தலைவரும் ஐக்கிய சோசலிச முன்னணியின் முக்கியஸ்தர்களுள் ஒருவருமான திரு வாசுதேவ நாணயக்கார கொழும்பில் உள்ள உதயன பிரதிநிதிக்கு விசேடபேட்டி ஒன்றை அண்மையில் அளித்தார். அதன் விவரம் இங்கு பிரசுரமாகின்றது

கேள்வி: இலங்கையின் ந்றைய அரசியல் நிலை பற்றி?

பதில்; கூடிய விரைவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் சாத்தியமான வாய்ப்புகள் உண்டு. சில வேளைகளில் அவன் செயல்கள் மிகவும் அதிகரிப்பின் ஒரு இராணுவ ஆட்சி ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

கே: ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள் பற்றி?

ப: திரு. பிரேமதாஸா ஆட்சிக்கு வருவாரானால் அவர் தன்னுடைய தற்போதைய நிலைப்பாட்டையே தொடர்வார். இந்தியாவுக்கு எதிரானவர் போல் காட்டிக் கொண்டு, இந்தியாவுடனும், மேற்கு நாடுகளுடனும் ஒரே சமயத்தில் தொடர்பு வைத்திருப்பார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தற்போது தன்னை ஒப்பந்தத்துக்கு எதிரானவராக காட்டிக் கொள்கிறார் ஆனால் அவர் பதவிக்கு வரும் பட்சத்தில் இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை கிழித்து எறிந்தாலும், இதே மாதிரியான வேறு ஒரு ஒப்பந்தத்தை இந்தியவுடன் செய்து கொள்ள முயல்வார்.

கே: ஐக்கிய சோசலிச முன்னணி இம் முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமா? உங்கள் வேட்பாளர் யார்?

ப; போட்டியிடும் திரு ஒஸி அபயகுணவர்த்தனதான் எம்முடைய வேட்பாளர் இவரின் தெரிவு விரைவில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப் படும்

கே; தமிழர்கள் விடயத்தில் ஐ சோ.மு யின நிலைப்பாடு என்ன?

ப: ★ வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்கள் தம்மைத் தாமே ஆளக் கூடிய விதத்தில் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். அதேவேளையில் அங்கு பாரம்பரியமாகக் குடியிருக்கும் முஸ்லிம்களினதும் சிங்களவர்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

★ வடக்கு - கிழக்கு மக்களின் பாதுகாப்புக்கு அவர்களையே கொண்ட ஒரு பாதுகாப்பு படை ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

★ மலையகத்தமிழர்கள் எல்லோருக்கும் பிரஜா உரிமை வழங்கப்பட்டு அவர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்

கே: வடக்கு- கிழக்கில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் குறித்து உங்கள் கருத்து?

ப: குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப் பட வேண்டும் அங்கு பாரம்பரியமாக குடியிருப்பவர்களை விட அண்மைக்கால குடியேற்றங்கள் யாவும் வாபஸ் பெறப்பட வேண்டும்.

கே: உங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் எவ்வாறு அமையும்?

ப: ★ முக்கியமாக இலங்கையை சகல முதலாளித்துவ சக்திகளின் பிடியில் இருந்து விடுவித்து முற்றிலும் தொழிலாளர்களையே கொண்ட ஒரு அமைப்பு ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்;

★ மற்ற நாடுகள் உலக வங்கி, சர்வதேச நிதிநிறுவனம் ஆகியவற்றின் பிடியில் இருந்து இலங்கையை விடுவிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

★ சகல வெளிநாட்டு முதலீடுகளும் தேசியமயமாக்கப்படும்

★ வடக்கு கிழக்கில் உடனடியாக தமிழீழ விடுதலைப் புலிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படும் அதனிடம் வடக்கு, கிழக்கின் ஆட்சி ஒப்படைக்கப்பட்டு அதிகாரங்களை பரவலாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்

★ இலங்கை- இந்திய ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டு எங்களுடைய பிரச்சினை எம்மிடையே தீர்த்து கொள்ளப்பட்டு இந்தியப்படை வாபஸ் பெறும்படி கோரப்படும்.

கேள்வி: உங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக தாம் ஏதாவது தமிழர் அமைப்புகளுடன் பேசியுள்ளீர்களா?

பதில்: இதுவரை நாம் பல அமைப்புகளுடன் பேசியுள்ளோம். இன்றும் நாம் விடுதலைப்புலிகள் உட்பட எந்தவொரு அமைப்புடனும் பேசத் தயாராக உள்ளோம்

கேள்வி; வடக்கு கிழக்கு தவிர ஏனைய பகுதிகளில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களில் மட்டும் நீங்கள் போட்டியிட்டது ஏன?

பதில்: நாம் தெற்கில் நடைபெற்ற மாகாண சபைத்தேர்தலில் போட்டியிட்டது மாகாணசபைகள் மூலம் தமிழர்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்படுவதை நாம் ஆதரிக்கிறோம் என்ற எமது நிலைப்பாட்டை சிங்கள மக்கள் மத்தியில் காட்டுவதற்காகவே.

ஆனால் மாகாணசபை மூலம் வடக்கு. கிழக்கு மக்களுக்கு உண்மையாக எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை என வ நாம் வடக்கு கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிட மாட்டோம்

அதிகாரப்பரவலாக்கத்திற்கு நாம் ஆதரவு என்பதை எடுத்துக்காட்டவே தெற்கில் போட்டியிட்டோம்.

கே: ஜனாதிபதி தேர்தலின் போது வடக்கு கிழக்கில் உங்கள் முன்னணி தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ளுமா?

ப: ஆம் வடக்கு. கிழக்கு மக்கள் எல்லோரும் முதலாளித்துவ ஆட்சியின் பிடியிலிருந்து விடுபட்டு சிங்கள மக்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு எங்களை ஆதரிக்க வேண்டும் என்று விரும்புகிறோம் ★

## விண்ணப்பம்

முல்லைத்தீவு பிரதேச மக்களில் பெரும்பாலானோர் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். அவர்களின் ஊதியம் உழைப்பு அனைத்தும் வயல்களிலேயே தங்கி உள்ளன. இவ்வயலில் உள்ள பயிர்களைக் கால்நடைகள் அழிக்காமல் காவல் புரிய காவலாளிகளை நியமிக்க அனுமதி வழங்குங்கள்

இவ்வாறு புதுக்குடியிருப்பு பிரசைகள்குழு புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் ஊடாக இந்திய அமைதிப்படை அதிகாரியிடம் கையளித்துள்ள கடிதத்தில் வேண்டியுள்ளது (உ-ச)

## பொதுக் கூட்டம்

பருத்தித்துறை அக் 10

அகிலஇலங்கைத் தமிழ் பேசும் சபாபதியார்கள் தொழிற் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 00 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது (உ-118)

## அடிக்கடி மின் தடை

யாழ்ப்பாணம், அக் 10

காங்கேசன் துறைபட்டினசபைக்கு உட்பட்ட ஊறணிக் கிராமத்தில் தினமும் மாலை 6 மணி தொடக்கம் எட்டு ,ஒன்பது மணிவரை அடிக்கடி பல தடவைகள் மின் தடை ஏற்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இக்குறையைநிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டுமென்று இப்பகுதி மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (உ)


# சவூதி அரேபியாவுக்கு உடனடி

## வேலை வாய்ப்பு

1. Wall Painter — 500 & 100 SR (வர்ணப் பூச்சாளர்)
2. Plumber — 600 & 150 SR (குழாய் பொருத்துனர்)
3. Hospital Cleaners — 400 SR (ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர் ஆண்கள் / பெண்கள் (இருபாலாரும்.)
4. Building Construction Cleaners — 400 SR (கட்டிடப் பகுதித் தொழிலாளர்)
5. University Cleaners 400 SR (கலாசாலை சுத்திகரிப்பாளர்)
6. Civil Supervisor — 600 & 150 SR
7. Site Supervisor — 600 & 150 SR
8. Carpenter — 550 & 150 SR (தச்சு வேலையாட்கள்)
9. Mason (மேசன்) — 550 & 150 SR
10. Swimming Pool Attendent — 700 & 150 SR (நீச்சல் தடாகக் கண்காணிப்பாளர்)
11. Electronic Technician — 750 & 200 SR (எலக்ரோனிக் தொழில் நுட்பவியலாளர்)
12. Work Schedular — 1200 SR
13. Building Electrician — 650 & 150 SR
14. Generator Electricians — 600 & 150 SR
15. Air Compressor Mechanic — 750 & 150 SR
16. Secretary / Typist — 700 & 100 SR
17. Heavy Equipment Mechanic — 900 & 200 SR
18. Cleaning Equipment Mechanics — 800 & 100 SR
19. Boiler Technicians — 1000 & 100 SR
20. Telephone Technicians — 800 & 100 SR
21. Welder — 650 & 150 SR
22. A/C Technicians — 800 & 100 SR

உடன் கடவுச்சீட்டு 3 பாஸ்போட் சைஸ் படம். 5 வருட அனுபவச் சான்றிதழ்களுடன் உடன் வந்து போவதற்குரிய ஒழுங்குகளைச் செய்யவும்.

பெண்களுக்கு வயது 30 தொடக்கம் 42 வரை.

இரண்டு கிழமைக்குள் பிரயாணம்.

Age Limits: 21 — 48 years.

**T V TRAVELS & TOURIST**

[Front of Railway Station]
Brown Road, Kokuvil.

(C 552)



# "M" THREE TRAVEL

பெருமையுடன் வழங்கும் உடனடி

## வேலை வாய்ப்புக்கள்

கீழ்க்காணும் வெற்றிடங்கள் தற்போது எம்மிடம் உண்டு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்யப்படும்

### சவூதி அரேபியா

1. Labourers (கூலியாட்கள்)
2. Heavy Vehicle Maintenance Helpers பார வாகன பராமரிப்பு உதவியாளர் } 2 இடம்
3. Generator Operators (மின்சார இயந்திர இயக்குனர்)

(ஓவர்டைம், தங்குமிடவசதி, உணவுவசதி)

**Open Visa**

25 வயதிற்கு மேற்பட்டவர்கள் மாத்திரம்

25 Container Driver (பொருள் பெட்டி சாரதி)

**800 றியால்ஸ்**

(ஓவர்டைம், தங்குமிடவசதி, உணவுவசதி)

நம்பிக்கை நாணயம் என்பனவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

**"M" THREE TRAVEL**

✶ புதிதாக கடவுச்சீட்டு செய்ய விரும்புபவர்களுக்கு ஒரு கிழமையில் கடவுச்சீட்டு எடுத்துக் கொடுக்கப்படும்

✶✶ எங்களிடம் புதுக் கடவுச்சீட்டு செய்பவர்கள் எங்கள் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினால் உடனடியாக விசா செய்து கொடுக்கப்படும்

✶✶✶ பொன்ட் (Bond) செய்து கொடுக்கப்படும்

இவை எல்லாவற்றிற்கும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

**த. இந்திரநாதன்**

சோதி லேன்
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை

No. 1, 2ஆம் ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C 561)


# அக்டோபர் 10ஆம் திகதியை நினைவு கூருகின்றோம்

கடந்த ஓராண்டு காலமாக நடைபெற்ற மோதலில் வீரமரணம் அடைந்த 319 விடுதலைப் புலிகளுக்கும்

## எமது வீரவணக்கங்கள்

ஆண்டுகள் ஒன்று போயின
எம் கவலைகள் துயரமிகுந்தன
வேண்டுமெம் விடுதலை
வேங்கைகள் அழிந்த கோர நினைவுகள்
ஆண்டுகள் போயினும் உங்கள்
நினைவுகள் எம்மை நீங்குமோ
இந்திய ஈழப் போரிலே
இன்னுயிர் ஈந்த எங்கள்
விடுதலைப் புலிகளுக் கேயெம்
கண்ணீர் அஞ் சலிகள்

— தமிழீழ மக்கள் சார்பில்
வடமராட்சி மாணவர்
ஒருங்கிணைப்புக் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனிடமிருந்து பென்சிலின் ஊசிமருந்து

## பாக். மருந்து அழிக்கப்படும்

கொழும்பு அக் 10

பென்சிலின் ஊசி மருந்தை பிரிட்டனிடமிருந்து இறக்குமதி செய்யும்படி சுகாதார அமைச்சு, அரச மருந்துக் கூட்டுத்தாபனத்துக்கு உத்தரவிட்டது.

இதுவரை பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பென்சிலின் ஊசி மருந்தே அரச ஆஸ்பத்திரிகளில் பாவிக்கப்பட்டு வந்தது

அந்த ஊசிமருந்து ஏற்றப்பட்ட மூவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து பாகிஸ்தான் தயாரிப்புகளை ஆஸ்பத்திரிகளில் திரும்பப்பெறும்படி சுகாதார சேவைகள் இயக்குநர் நாயகம் டாக்டர் ஜோ பெர்ணண்டோ உத்தரவிட்டிருக்கின்றார்

திருப்பப் பெறப்படும் பாகிஸ்தான் தயாரிப்பான பென்சிலின் ஊசி மருந்து அனைத்தும் அழிக்கப்படும்.

இப்படி டாக்டர் ஜோ பெர்ணண்டோ மேலும் தெரிவித்தார். (இ-எ)

# இந்தியப் பிரதமருக்கும் அதிகாரிகளுக்கும் மீளாய்வு அறிக்கை

## சர்வதேச மன்னிப்புச்சபை அனுப்பியது

இந்திய — இலங்கை உடன்படிக்கை கைச்சாத்தானபிறகு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான சம்பவங்கள், மற்றும் அவற்றுக்குப் பலியானவர்கள்பற்றியவிவரங்கள் அடங்கிய மீளாய்வு அறிக்கை ஒன்றை சர்வதேச மன்னிப்புச்சபை இந்தியப் பிரதமருக்கும், இந்திய உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்திருக்கிறது.

இந்த அறிக்கையுடன் விசேட கடிதம் ஒன்றையும் சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் இந்தியப்பிரதமருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

சம்பந்தப்பட்ட மீளாய்வு அறிக்கை சர்வதேச மன்னிப்புச் சபைக்கும், இந்திய அரசாங்கத்துக்குமிடையில் பேச்சு வார்த்தை ஒன்றை மேற்கொள்வதற்கு அடிப்படையாக அமையலாம் என்று தாம் எதிர்பார்ப்பதாக சர்வதேசமன்னிப்புச் சபை செயலாளர் நாயகம் தமது கடிதத்தில்தெரிவித்திருக்கிறார். (இ-ஐ)

### சாதனை

சனத்தொகை அடிப்படையில் பார்த்தால் ஆசியபசுபிக் பிராந்தியத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் தான் கூடுதல் எண்ணிக்கையில் சிறைகளில் விளக்கமறியல் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர் என்ற விவரம் தெரியவந்துள்ளது. (அ-எ)

### ஓய்வு பெற்றார்



சுன்னாகம் அக் 10

மாகாணத் தபால் அத்தியட்சகர் திரு. இ. அருளானந்தம் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

1947 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உதவித் தபால் அதிபராக பதவியேற்ற இவர் 1988 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் திகதி மாகாணத் தபால் அத்தியட்சகராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றார்.

மத்திய தந்திக் கந்தோர், யாழ்ப்பாணம், இரத்தினபுரி, அவிசாவளை, ஹட்டன், அம்பாறை, கொழும்பு மெயில் றூம் ஆகிய இடங்களில் பல்வேறு பதவிகளை வகித்த இவர் இறுதியாக மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய தபால் பிரிவுக்கு மாகாண அத்தியட்சகராக 1987 ஜூலையில் பதவி உயர்த்தப்பட்டார்.

உதவித் தபால் அதிபராக இருந்து மாகாணத் தபால் அதிபராக உயர்ந்து இளைப்பாறிய முதலாவது தமிழர் திரு அருளானந்தம் என்பது குறிப்பிடத்தக்கது (இ)

# உரும்பராய் இயல் இசை

யாழ்ப்பாணம், அக். 10

உரும்பராய் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையே இசை, நடன, நாடகப் போட்டிகள் உரும்பராய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. செ. சிவபாலன் தலைமையில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் முதலிடம் பெற்ற பாடசாலைகள் வருமாறு:-

**இசைப் போட்டி**

1. தனி ஆரம்ப பிரிவு- செல்வி க. சோபனா (உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை).
2. தனி கனிஷ்ட இடைநிலை - தேவகுமார் (உரும்பராய் இந்துக் கல்லூரி).
3. குழு கனிஷ்ட இடைநிலை -(உரும்பராய் இந்துக்கல்லூரி).
4. தனி சிரேஷ்ட இடைநிலை - செல்வி வை. தயாளினி. (ஊரெழு கணேச வித்தியாலயம்).
5. குழு சிரேஷ்ட இடைநிலை - (உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம்).

**நடனப் போட்டி**

1: தனிக் கனிஷ்ட இடைநிலை - செல்வி சி: திலகேஸ்வரி, (உரும்பராய் இந்துக் கல்லூரி).
2. குழு சிரேஷ்ட இடைநிலை - (உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம்).
3: தனி சிரேஷ்ட இடைநிலை - செல்வி சோ: கமலா, (உரும்பராய் இந்துக் கல்லூரி).

**நாடகம்**

ஊரெழு கணேச வித்தியாசாலை. (ச)

# கொத்தணி நாடகப்போட்டி

# 20 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

கொழும்பு, அக். 9

தென் மற்றும் மத்திய மாகாணங்களில் இருபதுக்கும் அதிகமான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.


**COMPUTER PROGRAMMING IN d BASE III**

பயிற்சிக் காலம்: 2 மாதம்

ஆரம்பம்: 11 10 - 1988

(செவ்வாய், வியாழன் வகுப்புகள்)

கட்டணம்: 1250/-(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்.)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி IBM (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும்

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள். ஆகையால், விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும்.

**UNIKCO Computer Centre**

No. 5. மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(உப தபாற் கந்தோருக்கருகாமை)

(C 325)



**வேலை வாய்ப்பு**

**லிபியா**

(1) எலக்ரிசன் - Electricians சம்பளம் 9 - 11,000வரை

(2) கொம்பியூற்றர் ஒபரேற்றர் Computer Operators - 12,000/-

(3) குவான்ரிற்றி சேவையர் Quantity Surveyors - 14,000/-

(4) உதவி குவான்ரிற்றி சேவையர் - 12,000/-

தொடர்பு கொள்ள வேண்டிய முகவர்:-

**கொழும்பில்**

18 1/4, முதலிகே மாவத்தை, போட்.

**யாழ்ப்பாணம்**

ந. பாஸ்கரன், J. P

இந்திராணி ஏஜென்சி

நெல்லியடி, கரவெட்டி.

உடன் தொடர்பு கொள்ளவும்.

(7155)



**கோம்பியூட்டர் பயிற்சி**

Diploma in Computer Programming in Basic Language இற்கான

**புதிய பிரிவுகள் ஆரம்பம்:**

12-10-1988 8.30 a.m

1 st Instalment Rs. 400/- only

யாழ். நகரிலேயே IBM உட்பட பலரக Computerகளில் பயிற்சி அளிக்கப்பட்டு முடிவில் உள்நாட்டு/வெளிநாட்டு அங்கீகாரமுள்ள சான்றிதழ்கள் வழங்கப்படும்!

**IDP**

Institute of Data Processing

யாழ்ப்பாணம்
K. K. S Road
(சிவன்கோவிலடி)

(4-00 p .m)
தெல்லிப்பழை
K.K.S Road.
(துர்க்கையம்மன் கோவிலடி)

(7156)


# மாணவர் தம்மைவழிநடத்த பயிற்சி அளிப்பவையே விளையாட்டுப் போட்டிகள்

குருநகர், அக். 10

மாணவர்கள் தங்களை வழி நடத்துவதற்கான தரமான பயிற்சியை அளிப்பதே பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதன் பிரதான நோக்கம் ஆகும். தோல்வியை ஏற்றுக்கொண்டு மனம் தளராமல்வெற்றிக்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு விளையாட்டுப் போட்டிகள் நல்லதொரு பயிற்சிக் களமாக அமைகின்றன,

யாழ். ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசளிப்பின் போது உரை நிகழ்த்திய யாழ். கல்வித்திணைக்களப் பிரதம கல்வி அதிகாரி திரு.கே. சோமசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டரங்கில் அதிபர் திருமதி பா. கந்தசாமி தலைமையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

திரு. சோமசுந்தரம் மேலும் தமது உரையில் கூறியதாவது:

'வாழ்க்கைக்குத் தேவையான நல்ல அனுபவங்களை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பித்துக் கொடுக்க வேண்டும். அதுதான் அவர்களுக்கு எதிர்காலத்தில் மிக்க உதவியாக அமையும்''.

ஊருக்கு ஊர் நல்ல தரமான பாடசாலைகள் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் பெரிய பாடசாலைகள் எனப் பெற்றோர் தேடி அலையும் நிலைமாறும்.

இப்படி அவர் கூறினார்.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ். தனஞ்செயன், பாடசாலை அதிபர் திருமதி பாக்கியம் கந்தசாமி ஆகியோரும் உரையாற்றினர்

இல்லங்களுக்கு இடையிலான போட்டிகளில் முதலாம் இடத்தை ஜசிந்தா (சிவப்பு) இல்லமும், இரண்டாம் இடத்தை லூசியா (மஞ்சள்) இல்லமும், மூன்றும் இடத்தை பத்திமா (பச்சை) இல்லமும் பெற்றுக் கொண்டன: பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கினார் (ச - 51)

# அரியாலையில் நினைவு தினம்

வடமராட்சி, அக். 10

திருமலை முன்னாள் பொறுப்பாளர் சந்தோசத்தின் ஓராண்டு நினைவஞ்சலி வைபவம் இம்மாதம் 21 ஆம் திகதி அவர் பிறந்த இடமான அரியாலையில் இடம் பெறும்.

அரியாலை பிரசைகள் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தநினைவுநாள் அன்று அரியாலை தபால் பெட்டிச்சந்திக்கு அண்மையில் நினைவஞ்சலிக் கூட்டமும், அன்னதானமும் இடம்பெறவுள்ளன.

அரியாலை பிரசைகள் குழுத் தலைவர் திரு.பொ சுந்தரலிங்கம் இதனைத் தெரிவித்தார். (சி-160)


தெல்லிப்பளை ப.நோ.கூ.ச. (வரையுள்ளது)

**அறிவித்தல்**

**வெற்றுச்சாக்கு கேள்விப் பத்திரம்**

மேற்படி எமது சங்கத்தில் 10,000 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குள்ளது மேலும் விபரங்கள் கேள்விப் பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ரூபா ஐநூறு வைப்புப் பணமாக தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும் கேள்விப்பத்திர விண்ணப்பம் 1988-10-18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால்மூலம் பொது முகாமையாளர், தெல்லிப்பளை ப.நோ.கூ சங்கம், தெல்லிப்பளை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்'' எனத் தவறாது குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரம் உப சபையினர் முன்னிலையில் 1988-10-18 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்குத் திறக்கப்படும்.

—பொது முகாமையாளர்

தெல்லிப்பளை.
1988-10-06

(C-390)



**இருபத்தைந்தாவது நினைவஞ்சலி**



மலர்வு: 5 8 - 1929

உதிர்வு: 17 - 9 - 1963

**திருமதி தெய்வானை தம்பிஐயா**

திதி: 10 - 10 - 1988

அன்னையே உனைப்பிரிந்து மூன்று நூறு திங்கள் ஆனாலும் உன் - அன்பான அணைப்பென்றும் மறந்தறியோம், உன் உதிரத்தை அமுதாக்கி ஊட்டி வளர்த்தாயே! வையத்தில் நீ விதைத்த வித்தெல்லாம் விருட்சமாய் இன்று வாழ்வோடு வழியுயர்ந்துன் வாழ்த்தோடு செழிக்கின்றோம் உனக்கு நிழல் தர நாமிருந்தும் நீயில்லை இப்போது, உண்மை நீ, உயிரும் நீ, உத்தம இலக்கம் நீ, உனையன்றி உலகத்தில் உறவுப் பேதம் எமக்கில்லை, வானோடு எழில் பொங்கும் வாழ்த்திடும் நின் ஆத்மா, மேதினியிலெம் மேன்மைக்கு மேலும் ஆசி தரும்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

நின் ஆத்மா சாந்தியடைய கண்ணீர் மலர்களால் நின் பாத மலர்களை அர்ச்சனை செய்யும் .........

பிள்ளைகள்: திருமதி இராசலட்சுமி சிவஞானப்பிரகாசம் (புறூனே), த தர்மகுலசிங்கம் (ஒட்டுசுட்டான் லக்ஷ்மி ரேடிங் சென்ரர்) த. குமாரகுலசிங்கம் (பிரான்ஸ்), மற்றும் உற்றார், உறவினர்கள்.

இராசகிரி,
கைதடி வடக்கு, கைதடி

(7163)


# மாணவர்கள் புத்தகப் படிப்போடு நிற்காது முத்தமிழிலும் ஆர்வம் காட்ட வேண்டும்

## வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி உரை

பருத்தித்துறை, அக் 10

''மாணவர்கள் வெறுமனே பாடப்புத்தகங்களை மட்டும் படிப்பதோடு நின்றுவிடாமல் இயல், இசை, நடன, நாடகத் துறைகளிலும் ஆர்வம் காட்ட வேண்டும்''

நாகர்கோவில் கொத்தணிப்பாடசாலைகளுக்கிடையான இசை, நடன, நாடகப்போட்டிகளின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சிக் கோட்டக் கல்விபதிகாரி செல்வி திலகவதி பெரியதம்பி மேற்கண்டவாறு கூறினார்.

இவ் விழா அம்பன் அமெரிக்கன் மிஷன் கல்லூரி மண்டபத்தில் நாகர்கோயில் கொத்தணி அதிபர் திரு. க. பரமகுரு தலைமையில் நடைபெற்றது.

செல்வி திலகவதி மேலும் கூறியதாவது:

இங்கு இடம்பெற்ற போட்டிகளை அவதானித்தபோது கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான மேடை அமைப்புக் கொண்ட மண்டபம் இல்லாத குறையை நன்கு உணர்ந்துள்ளேன்.

இக்குறையைப்போக்க அடுத்த ஆண்டு முற்பகுதியில் நாகர்கோவில் கொத்தணிப்பாடசாலைகளுக்கென அம்பன் அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு மேடையுடன் கூடிய மண்டபம் ஒன்றை அமைக்க நடவடிக்கை மேற்கொள்வேன்.

இது தவிர நாகர்கோவில் கொத்தணியிலுள்ள ஆசிரியர் பற்றுக்குறை, தளபாடப் பற்றுக்குறை, கட்டடப் பற்றுக்குறை, மலசலகூடத் தேவை கிணற்றுத் தேவை என்பவற்றைப் போக்குவதற்கு கொத்தணி அதிபரிடமிருந்து அறிக்கைகள் கோரியுள்ளேன்.

இவற்றை அரசின் நிதி உதவி மூலமோ அல்லது வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடனோ விரைவில் தீர்த்துவைக்க நடவடிக்கை மேற்கொள்வேன். இப்படி அவர் கூறினார்

இப்போட்டிகள் ஆரம்ப பிரிவுகளுக்கான நிகழ்ச்சியில் குடத்தனை கரையூர் றோ. க. வித்தியாலயமும், கனிஷ்ட இடைநிலைப் பிரிவில் இசை, நடன நிகழ்ச்சிகளில் செம்பியன்பற்று றோ. க. வித்தியாலயமும். கனிஷ்ட இடைநிலைப்பிரிவில் நாடக நிகழ்ச்சியில் அம்பன் அமெரிக்கன் மிஷன் கல்லூரியும், சிரேஷ்ட இடைநிலைப் பிரிவில் நாடக நிகழ்ச்சியில் நாகர்கோவில் மகா வித்தியாலயமும் முதலிடங்களைப் பெற்றன. (ச- 118)

# தென் இலங்கையில் மாணவர் ஆர்ப்பாட்டம்

## நாளுக்கு நாள் வலுக்கிறது

கொழும்பு அக் 10

தென் இலங்கை மாணவரின் ஆர்ப்பாட்டம் தொடருகின்றது என்று அறிவிக்கப்பட்டது.

அனுராதபுரம் மாவட்டத்தில் ஆறு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பொலீஸார் கண்ணீர் புகைப் பிரயோகம் செய்து மாணவரைக் கலைத்தனர்.

முதல் தடவையாக மஸ்கெலியாவிலும்மாணவர் ஆர்ப்பாட்டம் நடந்தது

கண்டி மாவட்டத்திலும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

மொனறாகலை, தங்காலை, பொலன்னறுவ, களுத்துறை காலிஆகிய மாவட்டங்களிலும் மாணவர் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (இ-எ)


வவுனியா நகரசபை.

**வழங்குநர்களைப் பதிவு செய்தல்- 1989**

பின்வரும் விடயங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு இச்சபையோடு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரசித்தி பெற்ற வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பங்களைக் கொண்டுள்ள காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1989 '' எனக் குறிப்பிட்டு 15 - 11 - 88 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ இதன் கீழ் கையொப்பமிட்டுள்ளவருக்குக் கிடைக்ககூடியதாக பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணங்களுக்கான காசோலை விண்ணப்பங்களுடன் அனுப்பப்படல் வேண்டும். பதிவுக் கட்டணத்துடன் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

| விநியோகம் | பதிவுக் கட்டணம் ரூ. ச. |
|---|---|
| 1. காகிதாதிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடஙகள் முதலியன | 100. 00 |
| 2. அச்சிடும் வேலைகள். | 100. 00 |
| 3. மின்சாரப் பொருட்கள் | 350. 00 |
| 4. சுகாதாரப் பொருட்கள் | 100. 00 |
| 5. வீதி, கட்டட அமைப்புப் பொருட்கள். | 100. 00 |
| **சேவைகள்** | |
| 6. வீதி, கட்டடங்கள் திருத்தமும் பராமரிப்பும் | 100. 00 |
| 7. கட்டட நிர்மாணம் | 100. 00 |
| 8. வீதி அமைப்புகள் | 100. 00 |
| 9. வண்டி, வாகனங்கள், தளபாடங்கள் பராமரித்தல் | 100. 00 |

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் நிரலிலிருந்தே வழக்கமாகக் கூறுவிலைகள் கோரப்படும். எனினும், அவசியமாகக் காணும் பட்சத்தில், வேறு வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரி கொள்வனவு செய்யும் உரிமை சபைக்குண்டு. வேண்டப்படும்போது விலைகளைச் சமர்ப்பிக்க அல்லது கொள்வனவாணை விடுக்கப்படும்போது உரிய காலத்தில் வழங்கத்தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விபரக் கூற்றுகளுக்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதனவாயிருக்கின்ற வழக்குநர்களின் பதிவுகள் அறிவித்தல் எதுவும் இல்லாது பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும்.

இ. இராமலிங்கம்
செயலாளர்,
நகரசபை, வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா, 4. 10. 88.

(C/553)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்.

**பொருள்:**

போர் வந்தால் உயிரின் பொருட்டு அஞ்சாமல் போர் செய்யத் துணியும் வீரர், அரசன் சினந்தாலும் தம்முடைய சிறப்புக் குன்றுதவர் ஆவர்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805, 28078
யாழ்ப்பாணம்.
10-10-1988
உ. பெ. இல. 23


## ஒற்றுமை பேண வழி

கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் மீண்டும் தமக்கிடையே பரஸ்பரம் நல்லுறவையும், நம்பிக்கையையும் வளர்க்க வேண்டியதன் அவசியத்தைப் பிரதித் தபால் தந்தித்துறை அமைச்சர் ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் வலியுறுத்தி உள்ளார்.

முந்திய நல்லுறவும், நம்பிக்கையும் வளர்க்கப்படாவிடில் இரண்டு சமூகங்களும் நலிவடைவதை எவரும் தடுக்க முடியாது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அந்த எச்சரிக்கை அர்த்தமுள்ளது என்பதனை இருசாராரும் புரிந்து கொள்வதும் உணர்ந்து கொள்வதும் நல்லது.

பல்லாண்டு காலமாகத் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் உடன்பிறந்த சகோதரர்கள் போல வாழ்ந்து வருகிறார்கள். பிட்டும் தேங்காய்ப்பூவும் போல அவர்கள் வாழும் கிராமங்கள் ஒன்றை அடுத்து மற்றது இருப்பதையும் அவதானிக்கலாம்.

சகோதரர்களிடையே இயல்பாகவே ஏற்படும் சிறு பிணக்குகள் போல, அவ்வப்போது இருசாராருக்கும் இடையே சிறிய சச்சரவுகள் ஏற்பட்டாலும் அவற்றை மறந்து மீண்டும் நல்லுறவை வளர்த்து வாழ்ந்து வந்தவர்கள் தமிழ், முஸ்லிம் மக்கள்.

அதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் இருக்கின்றன. ஒன்று: இரண்டு சமூகத்தினருமே இந்த நாட்டில சிறுபான்மை இன மக்கள். இரண்டாவது: இருசாராரின் தாய் மொழி தமிழ் என்பதாகும்.

எத்தனையோ பிரச்சினைகள், எத்தனையோ தடவைகள் உருவாகிய போதிலும், பகலவனைக் கண்ட பனிபோல அவை மறைந்துவிடக் காரணமாய் இருந்தவை முன் சொன்ன இரண்டுமே ஆகும். அவை இரண்டுமே கிழக்கிலங்கைத் தமிழ், முஸ்லிம் மக்கள் தூர விலகி விடாமல் பிணைத்து வைத்திருக்கும் கயிறுகளாகும்.

அந்தக் கயிறுகளையும் அறுத்து இரு பகுதியினரையும் பகைவர் ஆக்குவதற்கு வெளிச் சக்திகள் கடந்த இரண்டு மூன்று வருடங்களாக முழுமூச்சாக முயன்று வருகின்றன. காலத்துக்கும், சூழ்நிலைக்கும் ஏற்றவாறு வெளிச்சக்திகள் வெவ்வேறானவையாக இருந்ததும் உண்டு.

அன்புச் சகோதரர்களாக இருந்தவர்கள், ஒன்றாக வாழ்ந்தவர்கள் வெளியார் வலையில் விழுந்து தமக்கிடையே சண்டையிட்டுத் தங்களை அழித்துக் கொள்வதால் யாருக்கு லாபம்? கிடைக்கப்போகும் நன்மை என்ன?

சிறுசிறு விடயங்களில் கருத்து வேற்றுமை ஏற்படலாம் என் அரசியல் அதிகாரம் போன்ற பெரும் விவகாரங்களிலும் இருசாராரும் வெவ்வேறு கருத்துக்களை உடையவர்களாக இருக்கலாம். அதற்காக அடிபடவேண்டும் என்பதல்ல. அன்போடும், பண்போடும் பேசிக் கருத்து வேற்றுமைகளைக் களையலாம். அதுவே சிறந்த மார்க்கம்.

பிழையான ஒரு சம்பவத்தில் தொடர்புடைய எந்த நபராலும் தமது சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக மூடிமறைத்து அவரது செய்கைக்குத் துணைபோகக்கூடாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் இரு சமூகத் தலைவர்களும் இணைந்து பிரச்சினைகளைத் திறந்த மனதுடன் பேசித் தீர்க்க வேண்டும்— என்று பிரதி அமைச்சர் மஜீத் பிணக்குகளைத் தீர்க்க நல்ல மார்க்கம் கூறியிருக்கிறார்.

தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரித்து வைத்துத் தமக்கான சில லாபங்களைத் தேடுவதற்காக ஒன்றல்ல பல பிற சக்திகள் காத்திருக்கின்றன. இந்த ஆபத்தான பின்னணியைத் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

வேற்றுமையிலும் ஒற்றுமை காண வேண்டும் என்பார்கள். ஆனால் ஒற்றுமையை வேற்றுமையாக்க இடங்கொடுத்தல் ஆகாது.

ஒற்றுமை ஆக்கத்துக்கு வழி. வேற்றுமை அழிவுக்குப் பாதை. இதனை மனதில் இருத்தி, ஒவ்வொரு தமிழ், முஸ்லிம் மகனும் (சொல்லில் மட்டும் அல்லாமல்) செயலிலும் கடைப்பிடித்தால் தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையைக் குலைக்க எவராலும் முடியாது.

## ஆண்டு இறுதிப் பரீட்சை

யாழ் மாவட்டத்தில ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 9. வகுப்பு வரையிலான வகுப்புக்களுக்கு யாழ் மாவட்ட கல்வித் திணைக்கள பரீட்சைச் சபை நடத்தும் ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சைகள் நவம்பர் மாதம் மூன்றும்வாரத்தில் நடைபெறவுள்ளன.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் யாழ். கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் மேற்கொண்டுள்ளார்.

ஆண்டு 10, 11 ஆகிய வகுப்புக்களுக்கு ஆண்டிறுதிப்பரீட்சை பரீட்சைச் சபையினால் நடத்தப்படமாட்டாது. இவ் வகுப்புகளுக்கு பாடசாலை மட்டத்திலேயே உரிய மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

வளைகுடா அமைதிப் பேச்சு

# மூன்றுமாதகால முட்டுக்கட்டை நீக்கம்;
# ஐ.நா.வின்புதியயோசனையைஈரான்ஏற்பு!

## பரிசீலனையில் என ஈராக் அறிவிப்பு

பக்தாத், அக் 9

வளைகுடா அமைதிப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்க ஐ.நா. பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர் சமர்பித்த புதிய யோசனைகளை ஈராக் பரிசீலனை செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய யோசனையில்—

★ சர்வதேச எல்லைக்கு இரண்டு நாடுகளும் துருப்புக்களை விலக்கிக் கொள்ளுதல்.

★ ஹோர்முஸ் நீரிணையில் கப்பல்களைச் சோதனையிடுவதை ஈரான் நிறுத்திக் கொள்ளுதல்.

★ அமைதிப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டவுடன், இரண்டு நாடுகளும் யுத்தக் கைதிகளைப் பரிமாறிக் கொள்ளும்.

—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய யோசனைகளை இருநாடுகளும் கொள்கையளவில ஏற்றுக்கொண்டுள்ளதாக தெஹ்ரான் திரும்பிய ஈரான் வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வேலாயுதி தெரிவித்தார்.

ஆனால், ஈரான் அமைச்சரின் பேச்சு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருப்பதாக ஈராக் அறிவித்திருக்கிறது.

எப்படியாயினும் ஐ.நா. பொதுச் செயலாளரின் புதிய யோசனைகளை ஈராக் அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருவதாக பக்தாத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### பென் ஜோன்ஸன் விசாரணை ஆரம்பம்!

பிரபல ஓட்டப்பந்தய வீரர் பென் ஜோன்சன் மீதான விசாரணையை கனடா அரசாங்கம் வார இறுதியில் ஆரம்பித்தது.

சோல் ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் பென் ஜோன்சன் முதலாவதாக வந்து தங்கப்பதக்கம் பெற்றதும்,

பின்னர் போதை வஸ்து பாவித்ததன் காரணமாக அவருக்கு வழங்கப்பட்ட தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இந்த போதைச் சம்பவம் குறித்து பூரண விசாரணை நடத்தப்படும் என்று கனடா அரசு அப்போது அறிவித்திருந்தது. (எ)

வெளி உலகில்

## கழிவுப் பொருளைக் கடலில் எரிப்பதற்குத் தடை

லண்டன், அக். 9

இரசாயனக் கழிவுப் பொருள்களை கடலில் போட்டு எரிப்பதைத் தடுப்பது என்று சர்வதேச மாநாடு ஒன்றில் தீர்மானிக்கப்பட்டது.

65 நாடுகள் கலந்து கொண்ட இந்தச் சர்வதேச மாநாடு லண்டனில் கடந்தவாரம் நடைபெற்றது.

சோவியத் யூனியன் உட்பட மேற்கு நாடுகளும் இம்மாநாட்டில் கலந்து கொண்டன.

நச்சுக் கழிவுப் பொருளைக் கடலில் கொட்டி எரிக்கும் செயலுக்கு 1994 முதல் முற்றாகத் தடை விதிப்பது என்றும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. (எ)

ராஜீவ்காந்தி 10 முறை வந்தாலும்

# தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வரவே முடியாது!

## முன்னாள் அமைச்சர் சாமிநாதன் பேச்சு

சென்னை, அக் 9

"தமிழ் நாட்டிற்கு ராஜீவ் காந்தி 10 தடவை வந்தாலும், இ. காங்கிரஸ் ஆட்சிக்கு வர முடியாது" என்று முன்னாள் அமைச்சர் வி. வி. சாமிநாதன் கூறினார்.

பரங்கிப் பேட்டையில் நடந்த ஜானகி அம்மாள் ஆதரவு அ. தி. மு. க. கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் வி. வி. சாமிநாதன் பேசியதாவது:-

**10 தடவைகள் வந்தாலும்**

1967 ல் இறந்துபோன காங்கிரஸ் ஆட்சியை மீண்டும் உயிர்ப்பிக்க ராஜீவ் காந்தி மூலம் முயற்சிக்கிறார்கள். பாரதப் பிரதமர் 10 தடவை தமிழ்நாட்டுக்கு வந்தாலும், மீண்டும் காங்கிரஸ் ஆட்சியை ஏற்படுத்த தமிழ்நாட்டு மக்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள்.

எம் ஜி ஆர். மறைவுக்கு பிறகு அரசியல் சட்டப்படி அன்னை ஜானகி எம் ஜி ஆர் முதல் அமைச்சர் பொறுப்பை ஏற்றார்.

**பறித்தார்**

தமிழ்நாட்டில் முதல் பெண் முதல் அமைச்சர் என்று கூட பாராமல் ராஜீவ் காந்தி எங்கள் ஆட்சியை கவிழ்க்க தேடு, சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் பறித்தார்.

நித்தம் நித்தம், பயங்கரவாதிகளால் மக்கள் சுட்டுக் கொல்லப்படுகிற பஞ்சாபில்கூட சட்டசபை உறுப்பினர் பதவியைப் பறிக்கவில்லையே? தமிழ் நாட்டில் பறித்து விட்டாரே?

**எம். எல். ஏ. பதவி**

எம். எல் ஏ பதவி என்பது மக்களால் தரப்படுகிற பதவி, அதனால் தான் 5 ஆண்டுக்கு கொடுக்க பதவிப் பத்திரத்தை கிழித்தெறிந்து ராஜீவ்காந்தி நடுவானில் விமானத்தை கடத்தி பயணிகளைக் கொல்லுகிற பயங்கரவாதிகளை விட மிக பயங்கரமானவர். வாக்காளர்களின் தீர்ப்பை, உரிமைகளைப் பதவி வெறியால், பட்டப்பகலிலேயே கொன்றவர்.

பிரதமருக்கு கறுப்புக் கொடி காட்டவேண்டும் என்று கேட்கிறோம். தாயே வெந்த புண்ணில் வேலி வெதுபால் இருக்கிறதே! ஆட்சியையும் கலைத்து, சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் பறித்து புரட்சித் தலைவர் உண்டாக்கிய ஆளும் கட்சியையும், இரண்டு மூன்றாக உடைக்கிறார்கள்.

காங்கிரஸ் ஆட்சிவந்து விடும்என்று கனவு காணுகிறார்கள். காங்கிரஸ் தனித்து போட்டியிடும். எம். ஜி. ஆர். ஆட்சி இனி வராது என்று கர்ஜிப்பவர்களை கேட்டுக் கொள்கிறேன். முதலில் தமிழ்நாட்டில் 2 பாராளுமன்ற தொகுதிகளிலும் இடைத்தேர்தலை நடத்து.

துணிவிருந்தால் இ. காங்கிரஸ் தனித்து போட்டியிட்டும்.

திராவிட பரம்பரிய கட்சிகள், பிராந்திய கட்சிகள், எம். ஜி ஆர். கட்சிகள் எல்லாம் சேர்ந்து இ காங்கிரசை டெபாசிட் இழக்க வைக்கிறோம்."

மேற்கண்டவாறு வி. வி. சாமிநாதன் பேசினார்.

### அல்ஜீரியாவில் கலவரம் தொடர்கிறது

அல்ஜீரியாவில அரசு எதிர்ப்புக் கிளர்ச்சி தீவிரமடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இராணுவ அரசு வெளியிட்ட அறிக்கையில், வெளிநாட்டுச் சக்திகளின் நடவடிக்கை காரணமாகவே நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

கலவரங்களை முஸ்லிம் தீவிரவாத அமைப்புகளே தூண்டிவிடுவதாகவும் அரசு அறிக்கை மேலும் தெரிவித்தது.

பாகிஸ்தானில்

## தேர்தல் நடவடிக்கைகள் மும்முரம்;
### பெனுஸிர் - ஜூனஜோ மோதல் ஏற்படும்

இஸ்லாமாபாத், அக். 9

பாகிஸ்தானில் நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் நவம்பர் 16 ஆம் திகதியும் மாகாண சட்டசபைத் தேர்தல் மூன்று தினங்கள் கழித்து 19 ஆம் திகதியும் நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்திருக்கிறது

தேர்தலை நடத்துவதற்கான விதிமுறைகளையும் தேர்தல் கமிஷன் நேற்று வெளியிட்டது

இதனிடையில—

முன்னாள் பிரதமர் முகமட்கான் ஜூனஜோ தலைமையில் உள்ள முஸ்லிம்லீக்குடன் வேறு மூன்று எதிர்க்கட்சிகள் சேர்ந்து கூட்டணி ஒன்றை அமைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

திருமதி பெனுஸிர் பூட்டோ தலைமையில் உள்ள மக்கள் கட்சி தலைமையில் இன்னொரு கூட்டணியும் தேர்தலில் போட்டியிடவுள்ளது

## வடகொரியாவுடனான வர்த்தக உறவுத் தடையை தென்கொரியா நீக்கியது!

வடகொரியாவுடன் வர்த்தகம்மேற்கொள்ள விதிக்கப்பட்டிருந்த தடையை தென்கொரியா நீக்கியது.

இரண்டு கொரியாக்களுக்கும் இடையேயான வர்த்தகம் தேசிய இனம் ஒன்றுக்கு இடையேயானதான உள்நாட்டு வர்த்தகமாகக் கருதப்படும் என்றும் அதற்கு வரி விலக்களிக்கப்படும் என்றும் தென்கொரியத் தலைமைப்பிரதமர் ராவூ பே தெரிவித்தார்.

இதுகாலவரை வடகொரியாவில் இருந்து பொருள்களை இறக்குமதி செய்யும் தென்கொரிய வர்த்தகர் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டு வந்தது. (எ)

# அரச ஊழியர் கைது குறித்து உடன் தகவல் தர வேண்டும்

## திருகோணமலை ஊழியர்கள் மகஜர்

திருகோணமலை, அக் 10

திருகோணமலையிலுள்ள அரச அலுவலகங்கள் மற்றும் கூட்டுத்தாபனம், திணைக்களங்கள் ஆகியவற்றில் கடமை புரியும் ஊழியர்களை அமைதிப்படையினர் விசாரணைக்கு அழைத்துச் செல்லும்போது சம்பந்தப்பட்ட திணைக்களம், கூட்டுத்தாபன, அரசாங்க அலுவலக உயர் அதிகாரிகளுக்கு 24மணித்தியாலங்களுக்குள் அறிவிக்க வேண்டும் இவ்வாறு திருகோணமலையைச் சேர்ந்த அரசஊழியர்கள், மற்றும் கூட்டுத்தாபன திணைக்கள ஊழியர்கள் மகஜர் மூலம் இந்தியப்பிரதமர், இலங்கை ஜனாதிபதி ஆகியோரைக் கேட்டுள்ளனர்.

மேற்படி மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

★ கைது செய்யப்படும் ஊழியரைப் பார்வையாளர்கள் சந்திக்க அனுமதியளிக்கப்படவேண்டும்.

★ கைது செய்யப்பட்ட ஊழியர்களை துன்புறுத்தலுக்கு உட்படுத்தக் கூடாது.

★ கைது செய்யப்படுபவருக்கு மருத்துவ உதவி தேவைப்பட்டால் அது வழங்கப்பட வேண்டும்.

★ விடுதலை செய்யப்படும் போது அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியை குறிப்பிடும் படிதம் ஒன்று வழங்க வேண்டும்.

★ காலவரையின்றி எந்தவொரு ஊழியரும் தடுத்து வைக்கப்படக் கூடாது.

மேலும் எமது கடமையின் போது நாங்கள்பல கிராமங்களுக்குச் செல்ல வேண்டிவரும். அவ்வேளைகளில கிராமங்களில் பல தரப்பட்டவர்களை இளைஞர்கள் உட்பட பலரைச் சந்திக்கநேருகிறது. பலரைத் தெரியும்; சிலரைத் தெரிந்திருக்கிறது. தெரிந்தவர்களைப் பற்றிய தகவல்களைக் கூட எங்களால் தந்து உதவ முடியாது. ஏனெனில் அவ்வாறு தகவல் கொடுத்தால் எங்கள் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படலாம். ஆகவே இவ்வாறான இக்கட்டான நிலையை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டுமென்று கோருகிறோம். (உ-150)

### நவராத்திரி உற்சவம்

யாழ்ப்பாணம், அக் 10

அத்தியடி சிதம்பர நடராஜ வீரசக்தி விநாயகர் ஆலயத்தில் நாளை 11-ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் நவராத்திரி உற்சவம் சிறப்பாக நடைபெறும்.

இறுதிநாளான 20 ஆம் திகதி வியாழக்கிழமை விஜயதசமியன்று மானம்பு உற்சவம் நடைபெறும். [illegible] 5.00 மணிக்கு பூஜை [illegible]

### கழிவுக் கடதாசிக் களஞ்சியம்

மட்டக்களப்பு அக்10

கிழக்கிலங்கை காகித ஆலையில் சுமார் 20இலட்சம் ரூபா செலவில் கழிவுக் கடதாசிக் களஞ்சியம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

இதற்கான அத்திவாரக்கல் அண்மையில் ஆலை முகாமையாளர் ரு. எஸ் கணபதிப்பிள்ளையினால் நாட்டிவைக்கப்பட்டது (உ-21)

### மட்டு நகர் மாநகர ஆணையாளர்

மட்டக்களப்பு மேலதிக அரச அதிபர் திரு. பூ. சங்கரவேல் மாநகர சபை ஆணையாளராகவும் மறு அறிவித்தல் வரை கடமையாற்றுவார்.

இதற்கான நியமனக் கடிதம் உள்ளூராட்சி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (உ-21)

வெலிஓயாத் திட்டத்தின் கீழ்

## புல்மோட்டை பகுதியை சேர்க்க வேண்டாம்

### பொது அமைப்புகள் கோரிக்கை

திருகோணமலை, அக். 10

வெலிஓயாத் திட்டத்தின் கீழ் புல்மோட்டை, தென்னமரவாடி ஆகிய கிராமங்களைச் சேர்க்க வேண்டாம் என இப்பகுதியிலுள்ள பல ஸ்தாபனங்கள் [illegible] கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாக இலங்கை ஜனாதிபதி, உள்நாட்டு அமைச்சர் திரு கே. டபிள்யு தேவநாயகம்; இந்தியத் தூதுவர் திரு டிக்ஸிற் ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-150)

# வாசகர் திருமுகம்

## தாதியர் பயிற்சிக்கு விண்ணப்பிக்காதது ஏன்?

கடந்த 3 ஆம் திகதி வெளியான உதயன் ஆசிரிய தலையங்கம், தாதித்தொழிலின் புனிதத் தன்மை பற்றிக் குறிப்பிட்டு அதற்கு விண்ணப்பிக்காதவர்கள் கௌரவக் குறைவான தொழில் என்று அதனை எண்ணியே விண்ணப்பிக்காது விட்டார்களோ என்ற ஐயப்பாட்டையும் கிளப்பியிருந்தது

உண்மை நிலை அப்படியல்ல.

வேலையில் கிடைக்காமல் அலையும் படித்தோர் தாதித்தொழிலைப் புறக்கணிப்பார்களா? தாதித் தொழிலுக்கு கேட்கப்பட்ட தராதரம் பலருக்கு இல்லை என்பதே உண்மை.

ஜீ சி ஈ. (சாதாரண) தரப் பரீட்சையில் தமிழ் கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி கேட்கப்பட்டுள்ளது. அதனால் பலர் விண்ணப்பிக்க முடியவில்லை

தாதித் தொழிலுக்கு ஆட்கள் தேவை எனின் தராதரத்தைக் கொஞ்சம் குறைத்து விஞ்ஞானம் அல்லது சுகாதாரத்தில் திறமைச் சித்தி அல்லது இருபாடங்களிலும் சாதாரண சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று கேட்கப்பட்டிருந்தால் 4 ஆயிரம் பேர் வரை விண்ணப்பித்திருப்பார்கள்.

ஜீ சி. ஈ (உயர்தரப்) பரீட்சையில் சித்தியடைந்த பலருக்குக்கூட மேற்படி தராதரப் ஜீ சி ஈ (சாதாரண) தரத்தில் இல்லை; ஆகையால் விண்ணப்பிக்க முடியவில்லை. விண்ணப்பிக்காததற்கு இதுதான் உண்மைக் காரணம்

எமது பகுதிக்குரிய நியமனங்களை வேறு பகுதிக்கு கொடுப்பதால் எமது பகுதியல் தாதியார் பற்றுக்குறை நிவர்த்தியாகாது. ஆகவே தராதரத்தைக் குறைத்து எமது பகுதியிலுள்ளவர்களிலிருந்து தெரிவுசெய்வதே நன்று.

மல்லாகம் — ந. நகுலேஸ்வரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Indra Tooth Ache Drops
இந்திரா டல்வலி மருந்து
இது எல்லா விதமான பல்வலிகளையும் உடனே குணப்படுத்துகிறது. பல் விஷக்கிருமிகளை நாசஞ்செய்கிறது. பல் அசைவு பல் சொத்தை, பல் கட்டி, தந்த வாய்வு தந்த சூலை தூர்நீர் வடிதல் முதலியவற்றுக்குச் சிறந்தது.
கிடைக்கும் இடம்
க.செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச்சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

10 - 10 - 1988 திங்கட்கிழமை

C. S. K. Omha Water
சி. எஸ். கே. ஓமத்திராவகம்
(குழந்தைகளின் வயிற்று நோய்களுக்குச் சிறந்தது)
மந்தம், மாந்தம், வயிற்றுவலி, வாந்தி, வாய்வு, அஜீரணம், வயிற்றோட்டம், பூச்சி, நெஞ்செரிவு முதலியன தீரும்.
கிடைக்கும் இடம்:
க.செ. கைலாசம்பிள்ளைஅன் சன்ஸ்
மருந்துச் சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## மாற்று அரசு ஏற்பட்டாலும் தீர்வு வந்துவிடும் என்று தமிழ்மக்கள் ஏமாந்து விடக்கூடாது

### இடது கம்யூனிஸ்ட் அறிக்கை

யாழ்ப்பாணம் அக் 10

தற்போதைய யூ. என். பி அரசுக்குப் பதிலாக பெரும்பாலான இலங்கை மக்களின் அபிலாஷையின் அடிப்படையில் மாற்று அரசு ஒன்று ஏற்பட்டாலும் அந்த அரசும் தமிழ் பேசும் மக்களின் கோரிக்கைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வு கண்டு விடும் என்று எவரும் மயக்கம் கொள்ள முடியாது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) பொதுச் செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

அறிக்கை விவரம் வருமாறு:-

இலங்கையின் பல தரப்பு மக்களினது கோரிக்கைகளின் தாக்கத்தினால் தவிர்க்க முடியாத நிலையில் அரசு ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் தலைமையிலான யூ என். பி. ஆட்சியின் பதினொரு வருடகாலக் கொடுமைகளுக்கு முடிவு கட்டுவதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஆயினும் தேர்தல்நடத்தப்படுமா என்பதும், அப்படி நடத்தப்பட்டாலும் நேர்மையாக-ஜனநாயக வழிகளில் அது நடக்குமா என்ற பலத்த சந்தேகங்களும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் யூ. என். பி. யைத் தோற்கடிப்பதற்காக எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஆதரிப்பதென்ற முடிவை 3-10-1988 இல் கூடிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மத்திய குழு எடுத்துள்ளது.

இம்முடிவை கட்சியின் பொதுச் செயலாளர் கே. ஏ. சுப்பிரமணியம் பத்திரிகை அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளார்.

கடந்த பதினொரு வருட யூ. என். பி ஆட்சியில் நாடு பல்வேறு துறைகளில் கடுமையான அழிவுகளைச் சந்தித்து விட்டது. ஜனநாயக - தொழிற்சங்க- மனித உரிமைகள் யாவும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டன.

தொழிலாளர்கள், விவசாயிகள், புத்திஜீவிகள், மாணவர்கள் யாவரும் அநீதிகளுக்கும், அடக்குமுறைகளுக்கும் ஆளாக்கப்பட்டனர். தமிழ் பேசும் மக்கள் என்றுமே கண்டிராத கொடிய துன்பங்களுக்கு உள்ளாகினர்.

இத்தகைய யூ. என். பி. ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு சந்தர்ப்பமாக ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பாலான எதிர்க் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார்.

அப்பொது வேட்பாளர் சார்பாக முன் வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகள் கவனத்துக்குரியவையாகும்.

தேசத்தின் சுதந்திரம், சுயாதிபத்தியம், இறைமை, தன்னிறைவுத் தேவை, ஜனநாயக தொழிற்சங்க - மனித உரிமைகளை மீள நிலை நிறுத்துதல் வெளிநாட்டுக் கொள்கையில் நடுநிலை வகித்தல் போன்றவை நம் நாட்டு மக்களின் நிகழ்கால எதிர்கால வாழ்வோடு பின்னிப் பிணைந்தவை ஆகும்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் சகல தரப்பு மக்களும் யூ.என். பியைத் தோற்கடிப்பதற்கு பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஆதரித்து வெற்றி பெறச் செய்வது சரியானதோர் நடவடிக்கை ஆகும்,

கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக யூ என். பி அரசு தமிழ் மக்களுக்கு எதிராக நடத்திய கொடிய கலவரங்கள், தாக்குதல்கள். சித்திரவதைகள், கொலைகள், சொத்து அழிப்புக்கள் மற்றும் புறக்கணிப்புக்கள்போன்றவற்றுக்கு தக்க பதிலடி கொடுப்பதற்கு இந்த ஜனாதிபதித் தேர்தலை ஒரு நல்ல வாய்ப்பாகத் தமிழ்மக்கள் பயன்படுத்த முடியும்.

அதேவேளை சாதாரண உழைக்கும் சிங்கள மக்களின் மாற்று அரசுக்கான அபிலாசையை மதித்துச் [illegible]தன் மூலம் தமிழ் மக்கள் தமது போராட்டத்திற்கு சிங்கள மக்களின் ஆதரவைப் பெறமுடியும். இவ்விடயத்தில் கடந்த காலங்களில் தமிழ் மக்களின் தலைமைகள் இழைத்த பாரதூரமான தவறுகளைக் கவனத்தில் கொண்டு அவற்றைத் திருத்துவதும் அவசியமாகும்.

இன்றைய கேடுகெட்ட யூ. என். பி ஆட்சிக்குப் பதிலாக மாற்று அரசு ஒன்று ஏற்பட வேண்டும் என விரும்பும் பெரும்பாலான இலங்கை மக்களின் அபிலாஷையின் அடிப்படையில் உருவாகும் மாற்று அரசு கூடத் தமிழ் பேசும் மக்களின் கோரிக்கைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வு கண்டுவிடும் என்று எவரும் மயக்கம் கொள்ள முடியாது

அத்தகைய மாற்று அரசின் கீழும் தமிழ் பேசும் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கானதும்—பிரதேச சுயாட்சிக்கானதுமான போராட்டத்தை முன்னெடுக்கவேண்டியது அவசியமானதாகும் என்பதையும் இவ்வேளை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) சுட்டிக் காட்டுகின்றது. (இ)

### தென்மராட்சி....

[1ம்-பக்கத் தொடர்ச்சி]

றும், இதுபற்றி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டது.

★ விடுதலையாகாதுள்ள சகல அரசியல் கைதிகளும் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்.

★ இடைக்கால தமிழீழ அரசுஒன்றை மக்கள் உடன்பிரகடனப்படுத்த வேண்டும்

★ இந்திய அமைதிப் படை வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் மேலும், அவர்கள் உடமைகள் மேலும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள தினமான அக்டோபர் 10ஆம் திகதியை நினைவுகூர்ந்தும் தென்மராட்சி பச்சிலைப் பள்ளிப் பகுதிகளில் ஹர்த்தாலும் துக்கதினமும் அனுஷ்டிப்பதெனவும், அன்றைய தினம் மக்களின் சகல நடவடிக்கைகளும் ஸ்தம்பித நிலையை அடையவேண்டுமெனவும் தீர்மானிக்கப் பட்டது.

இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு சகல மக்களும் பூரண ஆதரவு வழங்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கப் படுகிறது. (இ-க)

### மாணவரின்...

(1ம்-பக்கத்தொடர்ச்சி)

ளின்போது 85 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

சில இடங்களில் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதாகவும் ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன. [-எ]

## 791 பாதையில் மினி பஸ் சேவை

(சில்லாலை, பண்டத்தரிப்பு, தொட்டிலடி ஊடாக யாழ்ப்பாணம்)

இன்று 10-10-88 திங்கள் முதல்

மாதகல், தனியார்துறை மினிபஸ் சேவைச் சங்கத்தால் 791 சில்லாலை — யாழ்ப்பாணம் பாதையில் மினி பஸ் சேவை ஆரம்பிக்க உள்ளோம் என்பதனை சகல மக்களுக்கும் அறியத்தருகிறோம்.

நன்றி.

இப்படிக்கு
கௌரவ செயலதிபர்
வி. சுப்பிரமணியம்

(7172)

ஜே வி.பி ஹர்த்தால் காரணமாக

## வெளியூர் பஸ்சேவைகள் இன்று பாதிக்கப்படலாம்

யாழ்ப்பாணம் அக் 10

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினதும். தனியாரினதும் வெளியூர்களுக்கான பஸ் சேவைகள் இன்று நடைபெறுமல் போகலாம்

ஜே.வி.பியினரின் ஹர்த்தால் காரணமாகவே இந்த சேவைகள் தடைப்படலாம் எனஎதிர்பார்க்கப்படுகிறது

இதேவேளை தென்மராட்சியிலும் ஹர்த்தாலுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளதனால் உள்ளூர் பஸ் சேவைகளும் பெருமளவில் பாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-க)

### போக்குவரத்து ஸ்தம்பிதம்

கோப்பாய், அக் 10

கோப்பாய் சந்தியினூடாக நடைபெற்று வரும் யாழ்—கொழும்பு பஸ் சேவைகள் நேற்று காலை 5.30 மணியிலிருந்து 8.30 மணிவரை கைதடிக்கு அப்பால் செல்ல முடியாது தடுத்து வைக்கப்பட்டன. (இ-72)

### பாகிஸ்தான் 165 ஓட்டங்கள்

லண்டன், அக் 10

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் மூன்றும் நாள் ஆட்ட முடிவில் நேற்று பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப்பெற்றது.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 340 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-க)

### இருவர் விடுதலை

திருகோணமலை அக் 10

இந்திய அமைதிப்படையினரால் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்ட மூவரில் திருமலை இந்து இளைஞர் மன்றச்செயலாளர், திரு.எஸ், சிவபாதசுந்தரம், கிராமசேவையாளர் திரு. எஸ், சுந்தரலிங்கம் ஆகிய இருவரும் விடுவிக்கப்பட்டனர் இந்துஇளைஞர்மன்றத்தைச்சேர்ந்த திரு. கே. சிறிஸ்காந்தராசா விடுவிக்கப்படவில்லை.

(அ-150)

### இன்றுகடைசி...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் குழுக்களே போட்டித்தவிர்ப்பு அடிப்படையில் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளன.

இதேவேளை சுயேச்சை வேட்பாளர்கள் நியமனப்பத்திரம் தாக்கல் செய்வதற்கான காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது.

சுயேச்சை வேட்பாளர்கள் எவரும் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யவில்லை எனவும் அறிவிக்கப்பட்டது

(இ-க)

### நீராகாரத்தை...

வருகிறார்கள்.

இதுவரை சாதகமான பதில் கிடைக்காத காரணத்தினால் இன்றுமுதல் நீராகாரத்தையும் நிறுத்திவிட்டு போராட்டத்தைத் தொடரப்போவதாக இவர்கள் அறிவித்துள்ளனர். (இ-21)

### பரீட்சை

மானிப்பாய், அக். 10

அதிபர்கள்தரம்I, II III ஆகியவற்றுக்கான பொதுப் பரீட்சை இம்மாசம் 29, 30ஆம்திகதிகளில் நடைபெறும்எனத் தெரியவருகின்றது.

(உ- 90)

### மந்திரிகளுக்கு குண்டு துளைக்காத கார்

கொழும்பு. அக் 10

குண்டு துளைக்காத கார்களை இறக்குமதி செய்ய அமைச்சர்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதியைச் சந்தித்து விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே அரசு இத் தீர்மானத்தை எடுத்தது. (இ-எ)

### அல்ஜீரியாவில் 200பேர் இதுவரை பலி!

அல்ஜீயர்ஸ் அக் 10

அல்ஜீரியாவில் இடம்பெற்றுவரும் கலவரத்தில் இதுவரை 200 பேர் வரை கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இராணுவம் சுட்டே இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. (எ)

### தற்போதைய ..

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

யின் தலைமைப் பதவி நேற்று பிரதமர் பிரேமதாசவிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஜனாதிபதி ஜெயவர்த்தன சம்பிரதாய பூர்வமாக தலைமைப்பதவியை பிரதமரிடம் ஒப்படைத்தார்.

(இ எ)

### 12 ஆயிரம்.....

(1ம்பக்கத் தொடர்ச்சி)

மாளிகையில் இன்று 10-10-88 நடைபெறும்.

வடமராட்சி பதக்கம் பெறுபவர்கள் பட்டியலில உள்ள சில முக்கியஸ்தர்களின் பெயர், விவரங்கள் வருமாறு:

1. அமைச்சர் லலித் அத்துலத் முதலி
2. அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிக்கல
3. முன்னாள் கூட்டுப் படைத் தளபதி ஜெனரல் ரணதுங்க
4. இராணுவத்தின் முன்னாள் தளபதி நளின் செனவிரத்ன
5 இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க
6. கடற்படைத் தளபதி ஆனந்த சில்வா
7. விமானப் படைத் தளபதி வால்டர் பெர்னாண்டோ
8. யாழ்ப்பாணம் பிரிகேடியர் ஜெரி டி சில்வா
9. பிரிகேடியர் டென்ஸில் கொப்பேகடுவ
10 பிரிகேடியர் விஜய விமலரத்ன. (இ-எ)

### இன்று பாடசாலை....

[1ம்-பக்கத் தொடர்ச்சி]

கேடுகளைத் தூண்டுகின்றன.

"மாணவர்களின் மேற்படி நடவடிக்கைகள் படையினரின் பொறுமையைச் சோதிப்பதாக அமைகின்றன.

பாடசாலைகள் காலவரையறையின்றி மூடுவது பற்றி அந்தந்த மாகாணசபை முதலமைச்சர்களே தீர்மானிப்பர்.

இவ்வாறு அரசாங்க அறிக்கையில் மேலும் [illegible]ப்பட்டுள்ளது. (இ-க)

## மட்டக்களப்பு-அம்பாறை ஈ.பி.ஆர்.எல்.எவ். வேட்பாளர்கள்

—உதயன் மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர்—

மட்டக்களப்பு, அக் 10

வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஈ. பி ஆர். எல். எப் மட்டக்களப்பு மாவட்டப் பட்டியலைக் கச்சேரி தேர்தல் அலுவலகத்தில் வைத்துக் கையளித்தது

கச்சேரி மூடப்பட்டுள்ளதால் கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள தேர்தல் அதிகாரி திரு. எம் பிரேமச்சந்திர பட்டியலைப் பெற்றுக்கொண்டார்.

இப் பட்டியலில் மட்டக்களப்பு - அம்பாறை பிராந்திய அமைப்பாளர் திரு பெரியதம்பி கிருபாகரன் தலைமையில் 14 பேர் இடம் பெறுகிறார்கள்.

வேட்பாளர் விபரம் வருமாறு:-

1, பெரியதம்பி கிருபாகரன் 2. நாகராசா நேசராசா 3. சிந்தாத்துரை பரமேஸ்வரமூர்த்தி 4. செல்லத்தம்பி கணேசமூர்த்தி 5. முகம்மது ஹனிபா ரபூஸ்டீன் 6. கனகரத்தினம் விஞயகமூர்த்தி 7. கதிர்காமர் குமரகுரு 8 ஆறுமுகம் பஞ்சலிங்கம் 9 செபரெட்ணம் புஸ்பராஜா 10. அந்தோனிப்பிள்ளை இச்னிஸியஸ் 11. கணபதிப் பிள்ளை தங்கவேல் 12 ஜெகராஜசிங்கம் லக்ஷ்மிகாந்தன் 13. ராசையா கோபிகராசா 14 சிவசுப்பிரமணியம் ருத்திரா.

கச்சேரி மூடப்பட்டுள்ளபோதிலும் இலங்கைப் படையினரின் அனுசரணையுடன் தேர்தல் அலுவலகத்தைத் திறந்து தேர்தல் அதிகாரி பணியாற்றினார்.

சுற்றாடலில் இந்தியப்படையினரால் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டிருந்தது.

### அம்பாறையில்

அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக ஈ. பி ஆர். எல். எப் தாக்கல் செய்துள்ள வேட்பு மனுவில் செல்வி சண்முகம் புவனேஸ்வரி என்ற பெண்ணும் இடம்பெறுகின்றார்.

அம்பாறை கச்சேரி தேர்தல் அலுவலகத்தில் தேர்தல் அதிகாரி திரு. டீ. ஏ. யூ. பி. நிஹால் பட்டியலைக் கடந்த வெள்ளிக்கிழமை பெற்றுக் கொண்டார்

பட்டியலை திரு. இ. துரைரத்தினம், திரு. க. சின்னையா ஆகியோர் கையளித்தனர்.

வேட்பாளர் விவரம் வருமாறு

1. இராசையா துரைரத்தினம், 2. கணபதிப் பிள்ளை சின்னையா, 3. அலியார் முகம்மத் மிஹிலார் 4. ஞானமுத்து பத்மநாதன் 5. நிசால் விதானகே சித்தன் 6. பரதேசி யோசேப் 7. மார்க்கண்டு குணசேகரன் 8. தங்கராசா அருச்சுனன் 9 வீரக்குட்டி சின்னத்தம்பி 10. வேலுப்பிள்ளை கந்தசாமி 11 சண்முகம் புவனேஸ்வரி 12 செல்லப்பா மகேந்திரராஜா 13. வேல்முருகு புவனேந்திரராஜா 14. தம்பிப்பா செல்வராசா 15. கந்தப்போடி சோதிநாதன் 16. காசிப்பிள்ளை மங்களராஜா 17. பொன்னன் ராஜா.

(இ-21)

### அறிமுகப்பயிற்சி

மானிப்பாய், அக். 10

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழக நிலையத்தில் கொம்பியூட்டர் அறிமுகப் பயிற்சி பாடநெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கான ஆள்சேர்ப்பு நேர்முகப்பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இப்பயிற்சி நெறியில் 125 பேர் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர் என்றும், இப்பயிற்சி நெறிக்காக 225 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் திறந்த பல்கலைக்கழக உத்தியோகத்தர் ஒருவர் தகவல் தெரிவித்தார்.

(உ- 90)

## உடல் ஊனமுற்றோர் ஒலிம்பிக் போட்டி

சோல் அக் 10

உடல் ஊனமுற்றவர்களுக்கான ஒலிம்பிக் போட்டிஎதிர்வரும்சனிக்கிழமை சோலில் ஆரம்பமாகிறது

70 நாடுகளைச் சேர்ந்த 3500க்கும் மேற்பட்டவர்கள் இதில் பங்கு கொள்கின்றனர்.

10 நாட்கள் இந்தப் போட்டிகள் நடைபெறும்.

சாதாரண ஒலிம்பிக் போட்டியில்வீரர்களுக்கு செய்யப்பட்டதுபோன்ற வசதிகள் யாவும் இம்முறை ஊனமுற்றவர்களுக்கும்செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

(இ-க)

### தீர்மானத்தில் உறுதி

கொழும்பு. அக் 10

பொலிஸ் அதிகாரிகள் சார்பில் சட்டத்தரணிகள் ஆஜராவதில்லை என்ற தீர்மானத்தில் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் உறுதியாக இருக்கிறது.

நேற்று முன் தினம் சங்கத்தின் கூட்டத்தில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட பகிஷ்கரிப்புத் தீர்மானத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

சட்டத்தரணி லியனராச்சி பொலீஸ் காவலில் இருந்து போது மரணமான சம்பவத்தைத் தொடர்ந்து சட்டத்தரணிகள் சங்கம் இந்த பகிஷ்கரிப்புத் தீர்மானத்தை எடுத்தது.

(எ)

ஏனைய மாணவர்களைத் தூண்டும்

## மாணவர்கள் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு. அக் 10

ஏனைய மாணவரை ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ளத் தூண்டும் மாணவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதுபற்றி சகல பொலீஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இதனிடையில் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட மாணவர்களை பாடசாலைக்குள் அனுமதிக்கவேண்டாம் என்று கல்வி அமைச்சு அதிபர்களைப் பணித்து உள்ளது

இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

பின்னர் பெற்றோர்களின் உத்தரவாதத்தின் பேரில் அம்மாணவர் விடுவிக்கப்பட்டனர். (இ-எ)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லமுத்து துரைச்சாமி

(நயினாதீவு)

நயினாதீவு திருமதி செல்லமுத்து துரைச்சாமி 8-10-1988 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. வைத்திலிங்கம் துரைச்சாமி அவர்களின் அன்பு மனைவியும், டாக்டர் தர்மலிங்கம் (Mihintale Hospital), திருமதி சிவபாக்கியம், திரு. சாம்பசிவம் (Germany), ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி குணவதி, திரு. R. S. லோகநாதன் (Rtd Supdt. of Survey), திருமதி நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-10-1988 அன்று காலை நயினாதீவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

4 ஆம், வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
து. தர்மலிங்கம்

(7173)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 10-10-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Monday 10th October 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org